விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 328 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை (12.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## விகாரைகள் தொடர்பான பிரச்சினைக்கு புதிய நீதிமன்றம் ஆரம்பிக்க வேண்டும்

### நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

பௌத்த விகாரைகள் தொடர்பாக பிரச்சினைகள் எழும் போது அவற்றை தீர்த்து வைக்க பிறிதொரு நீதிமன்றத்தை ஆரம்பிக்க முடியும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டம் அரசியலமைப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித் 19

## பெற்றோல், டீசல் விலை அதிகரிக்கலாம்

### அடுத்த ஆண்டு முதல் 10 வீத வரி உயர்வு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு (2024) ஜனவரி 1 முதல் பெற்றோல், டீசல் மற்றும் நிலக்கரி மீது வற் வரி விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த வரி உயர்வால் பெற்றோல், டீசல் 19




# விஷம் வைத்து கொல்ல முயற்சி

## விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் பரபரப்புத் தகவல்



(கொழும்பு)

தண்ணீரில் விஷம் வைத்து என்னைக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. எனக்கு உயிர் அச்சுறுத்தல் உண்டு என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

ஐ.பி.எல் ஏலம்

## இலங்கை அணி வீரர்கள் நீக்கம்

(கொழும்பு)

ஐ.பி.எல் ஏலத்திலிருந்து அனைத்து இலங்கை அணி வீரர்களும் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு இலங்கை அணிக்கு நேற்று முன்தினம் முதல் தடை விதிக்கப்படுவதாக ஐசிசி அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே குறித்த தீர்மானம் 19

## சீனாவின் ஆய்வுக் கப்பலுக்கு ஜனாதிபதி ரணில் மறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் சீனாவின் ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி கோரிய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்த வருடம் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் ஆராய்ச்சி மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக வருவதற்கு இடமளிக்க வேண்டாம்என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற 19

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு சர்வதேச ரீதியில் தடை

### பின்னணியில் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளதாக கிரிக் இன்போ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. 19

## 14 மாவீரர் துயிலும் இல்லங்களில் படையினரின் இராணுவ முகாம்கள்

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(முல்லைத்தீவு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் 14 மேற்பட்ட மாவீரர் துயிலும்இல்லங்களில்இராணுவத்தினர் முகாம்கள் அமைத்து நிலைகொண்டுள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியில் இராணு 19

## கிரிக்கெட்டுக்கு தடை மேன்முறையீடு செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியை தடை செய்தமை தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டமைக்கான 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டையிடும் கினிக் கோழிகள் விற்பனைக்கு

மெமோறியல் லேன்
மானிப்பாய் J/137,
கிராம சேவகர்
அலுவலகத்திற்கு அருகில்

**076 634 8343**

(17842)

## ICT CLASSES

Tamil & English Medium

Grade: 6,7,8,9 and 10,11

**Physical or Online Classes**

- Theory (ICT Text Book & Work Book)
- Practical on Computer
- Past Papers
- Unit Examination
- Model Papers

Home Visites Individual Classes

(C-7612)

Contact : V.V.Moorthy(ICT & IT)
Tel: 0777 469 282

## கடைக்கட்டிடம் விற்பனைக்கு

386 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 18 அடி அகலம் 210 அடி நீளம் கொண்ட கடைக்கட்டிடம் விற்பனைக்கு உண்டு. தற்போது மாதாந்த வாடகை 1,60,000/= இருக்கும் நிலையில் எடுக்க விரும்புவர்கள் எடுக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு

**077 390 2994**
**077 321 5353**

(17846)

## நாகபூஷணி திருமண சேவை

**அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியியலாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**
**071 999 9306**

(17849)


## கிரிக்கெட்டுக்கு...

காரணம் தங்களுக்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் மேன்முறையீட்டு செயற்பாடுகள் இடம்பெறும்.

அதேநேரம், சர்வதேச கிரிக்கெட் சபையிடம் இருந்து உரிய தீர்வு கிடைக்காவிட்டால், சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையில் அஹமதாபாத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கட்டின் தலைவராக சம்மி சில்வாவையே, அங்கீகரித்துள்ளதாக 'கிரிக் இன்ஃபோ' செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் நேற்று இடம்பெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் சம்மி சில்வா கலந்து கொண்டதாகவும், 'கிரிக் இன்ஃபோ' குறிப்பிட்டுள்ளது.

(ம-7)


## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

(17833)

**021 222 1265,076 250 0098**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

(C-7604)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## அலுவலக வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கிவரும் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்காக

♦ **Billing & Packing Staff** தேவை (ஆண்)

**தகைமைகள்**

- G.C.E (A/L) சித்தி
- நகர எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- நீண்டகாலம் தொழில் புரியக்கூடியவராக இருக்க வேண்டும்
- வயது 18 – 30 வரை

**076 690 8985, 076 690 8987**

(17844)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

(17838)

**077 814 7389,**
**077 986 5457**


## கண்ணீர் அஞ்சலி



(17837)

எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி **சுகந்தினி சந்திரகுமார்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் மாணிக்கர் செல்லத்துரை**

காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

## 1 ஆம் ஆண்டில் நீங்கா நினைவலைகள்



வடமுலை,

அருட்சகோதரி
**மேரி றுபினா**

பிறப்பு 01.01.1937 | இறப்பு 13.11.2022

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் எமக்குண்டு"

இவரின் ஆன்ம இளைப்பாற்றலுக்காக 13.11 2023 திங்கட்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு பாசையூர் திருக்குடும்ப கன்னியர்மடம் சிற்றாலயத்திலும் 17.11.2023 வெள்ளிக்கிழமை அன்று வசாவிளான் உத்தரிய மாதா ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.


பிரிவால் துயருறும்
**நித்தியானந்தராஜா குடும்பத்தினர்**

(17845)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும் தர்மம் நிலைக்கும் என நம்பிக்கை கொள்வோம்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கலாநிதி.ஆறு.திருமுருகன்



(தெல்லிப்பழை)

**அதர்மத்தின் வழியில் நின்றவர்கள் அழிந்து போவார்கள். அதனை உணர்த்துகின்ற திருநாளே தீபாவளி என ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலா நிதி.ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.**

தீபாவளிப் பண்டிகையின் வாழ்த்துச் செய்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நரகாசுரன் என்ற அசுரன் பலரை வருத்தினான். அருள் கொடுத்த இறைவன் அறத்தின் பால் நின்று அவனை அழித்தான். வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தந்த வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு நன்றியோடு வாழ வேண்டும். பிறர்க்கு உதவ வேண்டும். ஆணவத்தால் பிறரை வருத்தக்கூடாது.

அகந்தை என்னும் இருளில் இருந்து நாம் வெளியே வர வேண்டும். ஒளியேற்றிக் கொண்டாடும் தீபாவளி உயர்ந்த கருத்தை விளக்கி நிற்கிறது.

உலகில் உயர்ந்த தர்மம் நிலைக்க வேண்டும்.

அநியாயமாக போரகளின் வலுவால் ஒன்றுமறியா அப்பாவிக் குழந்தைகள் அல்லலுறுவதைக் காண்கிறோம்.

எங்கள் மண்ணில் நீதி நியாயத்துக்கு ஆபத்து வந்து விட்டது. இறைதீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கிறோம். எப்பவோ ஒரு நாள் தர்மம் நிலைக்கும் அதனை அனைவரும் எதிர்பார்ப்போம்.

தீபத்திருநாளில் அனைவரும் திருக்கோவில்களுக்குச் சென்று பிரார்த்திப்போம் நீதி நிலைத்து நிம்மதியாக அனைவரும் வாழ தெய்வங்களை மன்றாடுவோம்.

உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களின் நல்லாதரவைப் பெறுவோம்.

ஆனந்தமாக அனைவரும் வாழ எனது இதய பூர்வமான ஆசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரி வித்து அமைகிறேன் என அவர் தெரிவித்தார். (நி)

# பேருந்துகளிற்கு சிசிடிவி பொருத்த நடவடிக்கை

(கொழும்பு)

பயணிகள் பேருந்துகளில் சிசிடிவி கமராக்கள் மற்றும் ஜி.பி.எஸ் கண்காணிப்பு பொருத்துவதை கட்டாயமாக்க எரிசக்தி மற்றும் போக்குவரத்துக்கான பாராளுமன்றத்துறை மேற்பார்வைக் குழு முடிவு செய்துள்ளது.

எரிசக்தி மற்றும் போக்குவரத்துக்கான பாராளுமன்றத் துறை மேற்பார்வைக் குழு த்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் கூடிய போதே குறித்த முடிவு எட்டப்பட்டது.

மேலும், பேருந்துகளுக்கு வீதி அனுமதிப்பத் திரம் வழங்கும் போது, சம்பந்தப்பட்ட பேருந்துகளில் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தை கட்டாயமாக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இனிவரும் காலங்களில் பேருந்துகளுக்கு சிசிடிவி கமரா அமைப்புகளை கட்டாயம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு தலைவர் பணிப்புரை விடுத்தார். (நி)

# நடுநிலை தவறாது வலம்வரும் 'வலம்புரி'

## வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ்



(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தலையங்கத்திற்காக பத்திரிகையை எதிர்பார்த்திருப்பது என்பது சாதாரண விடயமல்ல. அது வலம்புரி பத்திரிகைக்குரிய தனிச்சிறப்பு. வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தைப் பற்றி வெளிநாட்டுப் பிரமுகர்கள் பேசியதை நாம் அறிவோம் என வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வலம்புரி பத்திரிகை அலுவலகத் திறப்புவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடுவுநிலையில் இருந்து தவறாமை ஊடகத்துக்கு மிகவும் முக்கியமான பண்பாகும். அதை வலம்புரி, இந்த மண்ணில் சிறப்பாக ஆற்றி வருகிறது. வலம்புரிக் குடும்பத்தை கட்டிக் காக்கின்றவர்களுக்கு நன்றி கூற வேண்டும். இந்த மண்ணில் இந்தப் பத்திரிகை தொடர்ந்து வெளிவருவதையிட்டு பெருமைப்பட வேண்டும்.

வலம்புரி இன்று போல் என்றும் சிறப்புற வாழ எனது வாழ்த்துக்கள் என அவர் தெரிவித்தார். (நி)

# வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அடுத்த வருடம் அனுமதியில்லை

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் ஆராய்ச்சி மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக இலங்கை வருவதற்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளதால், பிராந்திய ஒத்துழைப்புக்கு பிரச்சினையான கப்பல்கள் நாட்டுக்கு வருவதை நிறுத்துவதற்கு இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளதாக அரசாங்கத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவின் பிரகாரம், வெளிநாட்டுக் கப்பல்கள் அடுத்த வருடம் இலங்கைப் பெருங்கடல் பகுதியில் ஆராய்ச்சிக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் அவை இரத்து செய்யப்படும் என் றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரியில் மற்றுமொரு ஆய்வுக் கப்பலை அனுப்புவதற்கு சீனா அனுமதி கோரியுள்ள நிலையில் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

முன்னதாக இரண்டு சீனக் கப்பல்கள் வந்ததைப் போலவே இந்தக் கப்பலின் வருகை குறித்தும் இந்தியாவின் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டதாக இராஜதந்திர மட்ட கருத்துக்கள் தெரிவிக்கின்றன. (நி)

# இறக்குமதி செய்யப்பட்ட மிளகாயில் அதிக அஃப்லாடாக்சின்

## புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து இற க்குமதி செய்யப்பட்ட மிளகாயில் அஃப்லாடாக்சின் கலந்துள்ளமையினால், அதை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவி த்துள்ளது.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் 25 மிளகாய் கொள்கலன்களும் உள்ளடங்குவதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்கள் குழுவொன்று இந்த மிளகாயை இறக்குமதி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அஃப்லாடாக்சின் கல்லீரல் புற்றுநோய் அல்லது மரணத்தை கூட ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மார்ஷ் அதிரடி சதம் பங்களாதேஷை வென்றது ஆஸி





மிட்செல் மார்ஷின் அதிரடியான சதம் மூலம் பங்களாதேஷை வீழ்த்தியது அவுஸ்திரேலியா.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 43ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

குறித்த போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் க்ளத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக டவ்ஹித் ஹ்ரிடோய் 74 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், அவுஸ்திரேலிய அணியின் எடம் ஷம்பா 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 307 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணி 44.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக மிட்செல் மார்ஷ் 177 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில், பங்களாதேஷ் அணியின் டஸ்கின் ஹகமட் 61 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த மிட்செல் மார்ஷ் தெரிவானார். (ம-7)

# பாகிஸ்தானை வீழ்த்தியது இங்கிலாந்து



உலகக் கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தானை 93 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 44ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

போட்டியில் இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக, பென் ஸ்டொக்ஸ் 84 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில், பாகிஸ்தான் அணியின் ஹரிஸ் ரவூப் 64 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 338 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

அணிசார்பில் அதிகபடியாக அகா சல்மான் 51 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், இங்கிலாந்து அணியின் டேவிட் வில்லி 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (ம-7)





## ஆண்டொன்று ஆயிடினும்...

அமரர் **அமிர்தலிங்கம் காண்டீபன்**



எங்கள் ராஜு அண்ணாவே!
உங்கள் நினைவுகள் என்றும் அழியாதது!
மறைந்த எங்கள் சகோதரன் துளசி மீது கொண்ட
அதீத அன்பையும் மறவோம்!

என்றும் உங்கள் தம்பிகள்,
**தங்க. முகுந்தன்,**
**த.சுகந்தன், த.அகிலன்**
**மூளாய். 077 727 9238**

மலர்வு 15.06.1956
உதிர்வு 12.11.2022

(C-7614)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V.SAJEEVAN
DIRECTOR

ARRIVOLI BOOK DEPOT

Dealers in Stationery School Books, Indian Books,
Sports Items, Fancy Goods & Gift Items, Etc.



Paranthan Road, Puthukkudiyiruppu, Mullaitivu.
Styles Tamizha Sajeevan 077 6900470 077 6900120
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல வாழ்த்துக்கள்

மீண்டும் யாழ் நகரில்
புதுப்பொலிவுடன்

ரூபி ஜுவல்லரி

(ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1982)

இங்கு 916 தங்க நகைகள் ready - Made ஆக வாங்கவோ
அல்லது order கொடுத்து செய்து கொள்ளவோ முடியும்.

227 – 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 221 6919 / 077 734 4074
www.rubejewellery.com

எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரிலோ இலங்கையில்
வேறு எப்பாகத்திலோ கிளைகள் கிடையாது.



வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

(C-76079)

மயூரா உணவு வழங்கல் சேவை
மயூரா கேட்டறிங் சேவை

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



சகல நிகழ்வுகளுக்குமான உணவுகள்
(காலை, மதியம், இரவு) அனைத்தும்
ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.
077 930 4363
075 991 8171

சசிகா லேணர்ஸ் L

THE SASIKA LEARNERS

Reg.No DS-882

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

உரிமையாளர் தொடர்புக்கு: 0777 226 247 / 0776 140 361

தலைமைக்காரியாலயம்:
57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் மத்தி (Town)
T.P: 021 222 8004
077 998 6247
074 254 2264

கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்)
T.P: 021 221 7578
077 434 3149
077 990 5414

நெல்லியடி
T.P: 021 226 0999
077 261 2446

மல்லாகம்
T.P: 021 224 3393
077 343 6622

புன்னாலைக்கட்டுவன்
T.P: 021 224 6001
076 384 0684

பண்டத்தரிப்பு
T.P: 021 225 2333
077 434 3798

வேலணை
T.P: 021 221 5472
077 368 9319

வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்




(C-7606)

(C-7608) sasikadrivingschool@gmail.com www.sasikalearners.com Sasika Learners

TKT Mark நல்லெண்ணெய் No.1

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில்
மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...
தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்




T.P: 0778328828, 0776528633, 02122[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலில் செயல்நிலை ஆய்வு மாநாடு



இராமநாதர் சத்தியேந்திரம் பிள்ளை அவர்களும் ஆற்ற வாழ்த்துரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிர மணியம் பரமானந்தம் வழங்க உள்ளார்.

இவ் ஆய்வு மாநாட்டிற்கு பிரதம விருந்தி னராக வவுனியா பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி.மங்களேஸ்வரன் அவர்கள் கலந்து கொள்கிறார். முதன்மைப் பேச்சாளராக திறந்த பல்கலைக்கழக ஓய்வு நிலைக் கல்விப்பீட பேராசிரியர் மேனாள் பீடாதிபதி சசிகலா குகமூர்த்தி அவர்கள் கலந்து உரையாற்ற உள்ளார்..முதன் மைப் பேச்சாளர் அறிமுக உரையை கல்லூரியின் உபபீடாதிபதி நிதியும் நிர்வாகமும் திரு.திருநானந்தம் ஜெயகாண் டீபன் அவர்கள் ஆற்ற உள்ளார். நன்றி உரையை ஆய்வு மாநாட்டு மலராசிரியரும், மாநாட்டு பிரதம ஒழுங்கமைப் பாளரும் விரிவுரையாளருமாகிய திரு. பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் வழங்க உள்ளார். இவ் ஆய்வு அமர்வு ஒழுங் கமைப்பாளர்களாக சிரேஷ்ட விரிவுரை யாளர்களான கலாநிதி சந்திரிகா நாகேந் திரன், கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா அவர்களும் பணியாற்ற உள்ளனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து நடத்துகின்ற கல்வியியலில் செயல் நிலை ஆய்வு மாநாடானது 13.11.2023 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரி அரங்கில் நடைபெற உள்ளது. கல்வியியற் கல்லூரி வரலாற்றில் முதன் முதலாக தமிழ் மொழி மூலம் நடாத் தப்படுகின்ற கல்வியியலில் செயல்நிலை ஆய்வு மாநாடு இதுவாகும். யாழ்ப் பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் முன் னெடுக்கப்படும் இச் செயல்நிலை ஆய்வு மாநாடானது ஏனைய கல்வியியற்கல்லூரி களுக்கு முன்னுதாரணமான செயற்பாடா கும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கப்பட்டு இரண்டு தசாப்தகாலத்தின் பின்னர் முதன் முத லாக இக்கல்வியியலில் செயல்நிலை ஆய்வு மாநாடு இடம் பெறுகின்றது. கல்வியியல் பல்கலைக் கழகத்தை நோக்கிச் செல்லும் இக் காலகட்டத்தில் ஆசிரியர்களை ஆய்வாளராக்கும் முயற்சியாகவும் ஆசிரி யர்களது உயர்கல்வி மற்றும் வாண் மைத்துவ விருத்திக்கு வழிகாட்டியாக வும் இம் மாநாடு அமைவது சாலப் பொருத்த மானதாகும்.

எதிர்காலத்தில் ஆசிரியர்களை ஆய் வாளராக்கும் புது முயற்சியாக கல்வித் துறை சார்ந்து முன்னெடுக்கப்படும் இவ் செயல்நிலை ஆய்வு மாநாடு தமிழ் மொழி மூல கல்விப்புலம் சார் புலமை யாளர்களின் பங்களிப்புடன் நடை பெறு கின்றது. இவ் ஆய்வு மாநாட்டின் நிகழ்ச் சித் தொகுப்பாளராக சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி பாலசுப்பிர மணியம் தனபாலன் அவர்களும் வர வேற்பு ரையை சிரேஷ்ட விரிவுரை யாளர் திரு

இவ் ஆய்வு மாநாட்டின் இருக்கை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் மற் றும் கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி ஆனந்தமயில் நித் திலவர்ணன் மற்றும் திறந்த பல் கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ராஜினி சுப்பிரமணியசர்மா அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். செயல் நிலை ஆய்வு மாநாட்டில் யாழ்ப் பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி யைப் பூர்த்தி செய்த ஆசிரிய மாண வர்களாகிய ஶ்ரீதரன் வித்தகி, நுகு லெபி சாஜிதா மரியம், ரவீந்திரகுமார் டல்சா லினி, டினா திவ்வியமலர் கிறிஸ்டி தவசீ லன், காயத்திரி மகேந்திரன், தவராசா நிசாந்தினி, எம்.எஸ்.பாத்திமா சுமைகா, மகாலிங்கம் டர்சிகன், குண சேகரம் கஸ்தூரி, சண்முகநாதன் தேக சுகன் ஆகிய பத்துப்பேர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க உள்ளனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

**கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா,**
**விரிவுரையாளர்,**
**தேசிய கல்வியியற் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்,**

# சூரியன்-சந்திரன் போன்று வலம்புரி எந்நேரமும் பிரகாசிக்கும்

## வலம்புரிப் பத்திரிகை அலுவலக திறப்பு விழாவில் கலாநிதி ஆறு-திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

உலகப் பிரசித்தி பெற்ற ஓர் பத்திரிகையாக வும் தமிழ் மக்களின் குரலாகவும் இன்று வலம் புரி பத்திரிகை வளர்ச்சி யடைந்து உள்ளது என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமு ருகன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வலம்புரி பத்திரிகையின் புதிய கட்டடத் திறப்பு விழா வில் சிறப்பு விருந்தின ராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

கடவுள் நம்பிக்கை யுடையவர்கள் பயபக் தியாகத் தர்மத்தின் அடிப்படையில், இப் பத்திரிகையைத் தொட ங்கியதின் பயனாக அது இன்று வரை சிறப் பாக நிலை பெற்று உள் ளது.

கல்விச் சமூகம், இளைய தலைமுறை மற்றும் நம் முன்னோ ர்கள் பின்பற்றி வந்த சைவ சமயப் பாரம் பரியம் என எல்லாவற் றிற்கும் ஆசிரியர் தலை யங்கத்தில் விடயங் களை உள்ளடக்கி எடுத்துரைக்கின்ற ஓர் உன்னதமான பத்தி ரிகை வலம்புரி.

அரசியல் மட்டுமல் லாது தர்ம சிந்தனை யுடன் வலம் வரும் வலம்புரிப் பத்திரிகை நிறுவனம் பழைமை யும், புதுமையும் சேர் ந்த ஒரு மண்டபத் திலே குடிகொண்டு இரு ப்பது மகிழ்ச்சி அளிக் கின்றது.

சூரிய-சந்திரன் நிரந் தரமாகப் பிரகாசிப்பது போல வலம்புரியும் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டும்.

தர்ம சிந்தனை களை எடுத்துரைத்து சமுதாயத்தை நல்வழி ப்படுத்த வேண்டுமென வும் தெய்வத்திருவரு ளால் இப்பணி சிற ப்பாகத் தொடர வேண்டு மெனவும் நிறைந்த ஆசிகளை வழங்குவ தாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# கொடிகாமத்தில் சொகுசு பேருந்து

## கூலர் வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவகச் சேரிப் பிரதேசசபை முன் பாக ஏ-9 வீதியில் நேற்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகா யமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த சொகுசு பேருந்தும் யாழில் இருந்து கொழும்பு நோக் கிச் சென்ற கூலர் ரக வாகனமும் கொடி காமம் நகரை அண்மித்து நேரு க்கு நேர் மோதி விபத் துக்குள்ளாகியுள்ளன.

இதில் கூலர் வாகன சாரதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (நி-30-33-30-104)

# இராசிபலன்

12.11.2023
ஐப்பசி 26, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 03.07 மணிவரை

சுவாதி பின்னிரவு 8.13 மணிவரை
சுபநேரம் -9.06-10.36 மணிவரை
இராகு காலம்-4.36-6.06 மணிவரை

போதாயன அமாவாசை
தீபாவளிப் பண்டிகை

**வளவன்**

**மேஷம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வருமானப் பெருக்கத்திற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, செலவுக் கேற்ற வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு நன்மை தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுக முண்டு.

**ரிஷபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழில் உற்சாகம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்:** ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் அதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிப்பாட்டினால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்:** கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்-னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், ரோக பயமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 414
Viber 076 636 3378



# வெட்கம் வேதனை அவமானம்!

**கணவான்களின் விளையாட்டு எனப் போற்றப்படும் கிரிக்கெட்டுக்குள் அரசியலைப்புகுத்தி, நன்றாக இருந்த அணியை நாசமாக்கியவர்கள் இனி மேலாவது இலங்கை கிரிக்கெட் சபையை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்.**

கிரிக்கெட் என்பது கணவான்களின் ஆட்டம் என வர்ணிக்கப்படுகின்றது. ஏனைய விளையாட்டுக்களில் சண்டை சச்சரவுகள் இருக்கின்ற போதிலும் கிரிக்கெட்டில் அவ்வாறான செயற்பாடுகள் எழுவது மிக மிக குறைவு என்பதைக் கூறி விட முடியும்.

அந்தளவிற்கு கிரிக்கெட் மிகவும் கன்னியமான ஆட்டமாக உலகளவில் வர்ணிக்கப்படுகிறது.

உலகக்கிண்ண கிரிக்கெட் ஆட்டம் தற்போது இந்தியாவில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

நடந்து முடிந்த ஆட்டங்களின் அடிப்படையில் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் போன்ற அணிகள் முதல் நான்கு நிலைக்குள் நிற்கின்றன.

இலங்கை அணி நான்கு புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் இருக்கின்றது. இதுவரை விளையாடிய ஒன்பது போட்டிகளில் வெறும் இரண்டு வெற்றியைப் பெற்று ஏனைய போட்டிகளில் படுதோல்வியைச் சந்தித்த இலங்கை அணிக்கு ஒன்பதாவது இடம் என்பதை இலங்கை ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளவே முடியாதது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகள்கூட இலங்கைக்கு முன் இருப்பது மிகவும் கவனிக்க வேண்டிய விடயம்.

இலங்கை அணியின் தோல்விக்கு காரணம் என்ன என்று தேடினால் அரசியல் பதிலாக அமையும்.

அந்தளவிற்கு இலங்கை கிரிக்கெட்டிற்குள் அரசியல் புகுந்து விளையாடுகிறது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முதற கொண்டு பல அரசியல்வாதிகள் விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று உலக வரைபடத்தில் ஒரு புள்ளியான இலங்கையை உலகமே தேடிப் பார்க்க வைத்தது அன்றைய, அர்ஜீனரணதுங்காவின் தலைமையிலான இலங்கை அணி.

ஜெயசூர்யா, அரவிந்த டிசில்வா, களுவிதாரண போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும் சமிந்தவாஸ், முத்தையா முரளிதரன் போன்ற உலகம் போற்றும் மிகச் சிறந்த பந்து வீச்சாளர்களையும் கொண்ட ஒரு பலம் மிக்க அணியாக உருவெடுத்திருந்தது இலங்கை அணி. இந்தப் பலத்திற்கு அணியில் இருந்த ஒற்றுமை, போர்க்குணம், விட்டுக் கொடுப்பு, அர்ப்பணிப்பு என்பவையே முக்கிய காரணமாக அமைந்தது.

அணியின் ஒற்றுமைத் தன்மைக்கு ஒரு உதாரணத்தை கூறிவிடமுடியும்.

சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வீசும் பந்து முறையற்றது என அவுஸ்திரேலியா நடுவர் முறையிடுகிறார்.

முரளிதரன் பந்தை எறிகிறார் என்று மீண்டும் மீண்டும் நடுவர் "நோ போல்" சைகை காட்டுகிறார்.

**அவுஸ்திரேலிய ரசிகர்கள் அரங்கில் இருந்து** கத்திக் குழறி முரளியைக் கேலி செய்கின்றார்கள்.

அணித்தலைவர் அர்ஜுனரணதுங்க மீண்டும் மீண்டும் முரளியை பந்து வீசச் சொல்கிறார். ஆனால் நடுவரோ அவர் பந்தை எறிகிறார் என சைகை காட்டியபடி "நோ போல்" சமிக்ஞை செய்கிறார்.

ஒரு கட்டத்தில் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அர்ஜுனரணதுங்க இலங்கை அணியினரை அழைத்துக் கொண்டு மைதானத்தை விட்டு வெளியேறுகிறார்.

நிலை உணர்ந்த நடுவர்கள் முரளிதரனை பந்து வீச அனுமதித்தனர். அதன் பின் முரளிதரனுக்கான பந்து வீச்சுச் சோதனையில் அவர் பந்தை எறியவில்லை என்ற முடிவை ஐ.சி.சி வெளியிடுகிறது.

முரளிதரன் பந்தை எறிகிறார் என்று நடுவர் கூறியதும் அர்ஜுனரணதுங்க நினைத்திருந்தால் 'வேறு ஒரு பந்து வீச்சாளரை அழைத்து பந்து வீச வைத்திருக்கலாம். அதை அவர் செய்யவில்லை. இலங்கை மொத்த அணியும் முரளிதரனுக்கு உறுதுணையாய் நின்றது.

அந்தத் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்று வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது.

அப்போதைய இலங்கை அணிக்கும் இன்றைய இலங்கை அணிக்கும் இடையிலான தொடர்பு என்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைப் போன்றதே.

அணி சரியான கட்டமைப்பில் இல்லை என்பது அடிக்கடி அணித் தலைரை மாற்றுவதில் தெளிவாகத் தெரிந்தது.

உலகக் கிண்ண ஆட்டங்களுக்கு முன் ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெற்றது.

அதுவரை சிறப்பாட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை, இறுதிப் போட்டியில் இந்தியாவை எதிர்த்தாடியது. இதில் 50+ ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து படுதோல்வியடைந்தது.

அதன் தாக்கம் உலகக் கிண்ணத் தொடரில் மிக மோசமான ஆட்டமாக மாறியிருக்கிறது.

நிலை இதுவாக இருக்கையில் சர்வதேச கிரிக்கெட் பேரவை இலங்கை கிரிக்கெட் அணிக்கு தடைவிதித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைக்குள் அரசியல் தலையீடு, நிதி மோசடி என்பன இருப்பதாகவும் அதை சரி செய்த பின்னரே இலங்கை அணி மீதான தடைநீக்கப்படும் என அறிவித்துள்ளது.

இது உலக வரலாற்றில் இலங்கை மீது வீழ்ந்துள்ள கரும்புள்ளி.

இதை நிவர்த்தி செய்ய வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் தார்மிக பொறுப்பு.

சர்வதேச அரங்கில் கணவான்களின் விளையாட்டு எனப் போற்றப்படும் கிரிக் கெட்டிற்குள் அரசியலைப் புகுத்தி நன்றாக இருந்த அணியை நாசமாக்கியவர்கள் இலங்கை கிரிக்கெட் சபையை சுயாதீனமாக இயங்க இடம் கொடுக்க வேண்டும்.





உலக வரலாற்றில் முரளிதரன், சமிந்தவாஸ், மலிங்க, சங்கக்கார, ஜெயசூர்யா என சாதனை வீரர்களைக் கொண்ட அச்சுறுத்தல் மிக்க அணி இன்று தோல்விகளின் அணியாக பரிதாப நிலையில் இருக்கிறது.

இந்த நிலை மாற வேண்டும். இலங்கை அணி உலக வரலாற்றில் தனக்கு குத்தப்பட்ட கரும்புள்ளியை துடைத்தெறிய வேண்டும். அதற்கு அணிஸ்திரம் மிக்க அணியாக கட்டமைக்கப்படவேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## ஒருபுறம் அறம் உரைத்த வள்ளுவர் சிலை மறுபுறம் ஐந்நூறுக்கும் ஆயிரத்துக்கும் டி.ஜே

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாராயணப் பெருமான் நரகாசுரனை வதம் செய்தநாள்.

அசுரத்தனம் அழிக்கப்பட்டதால் ஒளி மயமான வாழ்வு மலரும் என்ற தத்துவத்தை எடுத்துரைக்கின்ற தீபாவளித் திருநாளில் நாமும் எங்களுக்குள் இருக்கின்ற அசுரத்தனத்தை அழித்து தெய்வத் தன்மையை பெருக்குவோம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** பண்டிதர் சொல்லுறது தீபாவளித் திருநாளின் தத்துவத்தை. ஆனால் நடைமுறையில் எங்களில கணிசமானவர்கள் நரகாசுரன் வதம் செய்யப்பட்டதால, கோபமும் துயரமும் அடைந்தவர்கள் போலல்லோ தீபாவளியில நடந்து கொள்ளுகினம்.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது.

**விதானையார்:-** சாத்திரியார் சொன்னது சரிதான். தீபாவளி எண்டால் சாராயம் குடித்து, இறைச்சி சாப்பிட்டுக் கொண்டாடுகிற வழமை எங்களிட்ட வந்திட்டுது.

அதிலும் ஞாயிற்றுக் கிழமையில தீபாவளி வந்ததால றோட்டால போறது கொஞ்சம் கரைச்சல் தான்.

**கங்காணி:-** நாங்கள் இந்து சமயத்தின்ர அருமையான தத்துவங்களுக்கு முரணாகச் செயற்படுகிறம்.

உண்மைப் பொருளை உணர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை பாடசாலை மட்டத்தில செய்தால் மட்டும் தான் எதிர்காலத்திலயாவது எங்கட சந்ததியினர் மெய்ப்பொருள் உணர்ந்து அதன்படி நடப்பர்.

**மூப்பர்:-** அது சரி இலங்கை கிரிக்கெட் சபைக்கு சர்வதேச தடை விதிக்கப்பட்டிருக்குதல்லோ என்ன சங்கதி.

**விதானையார்:-** இலங்கை அருமையான நாடு. ஆனால் இப்ப நடக்கிற ஊழல் கொஞ்சமல்ல.

இந்தாப் பாருங்க சாதுக்களாக வாழ வேண்டிய பௌத்த பிக்குகள் சண்டித்தனம் செய்யினம்.

வெட்டுவன், கொலை செய்வன் எண்டு வெருட்டுகினம் எண்டால் அவர்களிட்ட இருக்கிற வெறித்தனம் எப்பேற்பட்டது எண்டு தெரியுது தானே!

**வாத்தியார்:-**என்னைப் பொறுத்த வரையில இலங்கையின்ர கிரிக்கெட் சபைக்குச் சர்வதேச தடை விதிக்கப்பட்டமை இலங்கையின் ஆட்சித் திறம் எப்படியாக இருக்கிறதென்பதைத் தோல் உரித்துக் காட்டுகுது.

ஒரு கிரிக்கெட் சபையைச் சரியாக வழிப்படுத்தத் தெரியாத நாடு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் எண்டால் அதை எப்படி நம்ப முடியும்.

ஆகையால கிரிக்கெட் சபைக்கு விதிக்கப்பட்ட சர்வதேசத் தடையை கருத்தில கொண்டு இலங்கை பற்றிய தீர்மானங்களை சர்வதேச பொது அமைப்புக்கள் எடுக்க வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** என்ன இருந்தாலும் சிங்களவர்களைப் பொறுத்த வரை அவர்களிட்ட ஆட்சி அதிகாரம் இருக்குது. அவர்கள் தங்கட இனத்தை எப்படியும் பாதுகாத்துப் போடுவினம்.

ஆனால் எங்கட தமிழ் இனத்தைப் பொறுத்த வரை எங்களுக்கு உரிமையும் இல்லை ஆன தலைமையும் இல்லை.

இதற்கு நல்ல உதாரணம் அண்மையில யாழ்ப்பாண நகரத்தில உள்ள ஒரு ஹோட்டலில நடந்த டி.ஜே பாட்டி.

**மூப்பர்:-**என்ன சிறாப்பர் சொல்லுறியள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**சிறாப்பர்:-** கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பிரபலமான விடுதியில டி.ஜே பாட்டி நடந்திருக்குது.

எங்கட பிள்ளைகள் சிலர் அதில கலந்து கொண்டு ஆடினவர்கள். டி.ஜே பாட்டி என்பது எங்கட தமிழ்க் கலாசாரத்திற்குப் பொருத்தமில்லாதது.

இருந்தும் ஆண்களுக்கு 1000 ரூபாயும் பெண்களுக்கு 500 ரூபாயும் கொடுத்து கொழும்பில உள்ள நிகழ்ச்சி ஏற்பாட்டு அமைப்பொன்று இந்த டி.ஜே பாட்டியை நடத்தியிருக்குது.

முந்தின நிலைமை இருந்தால், இப்படியான ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் இஞ்ச வைக்க முடியுமா என்ன?

**விதானையார்:-** உலகிற்கு அறம் உரைத்த வள்ளுவர் சிலையை யாழ்ப்பாண நகரில பிரதிஸ்டை செய்து போட்டு, டி.ஜே பாட்டியும் நடத்திற அளவில எங்கட பண்பாடு விலை போய்க் கொண்டிருக்குது கவனம்.

**வாத்தியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். அண்மையில என்ர நண்பர் ஒருவரைச் சந்தித்தன். அவர் மிகுந்த வேதனையோடு கூறிய விடயம் இது.

ஒரு இளம் பிள்ளையின்ர பிறந்த நாள் பாட்டி யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு ஹோட்டலில் நடந்தது. அங்க ஒரு குறிப்பிட்ட அளவில ஆண்களும் பெண்களுமாக இளம் பிள்ளைகள் வந்திருந்தனர்.

அவர்கள் உயர்தர வகுப்பைக் கடந்தவர்கள். எங்கோ ஒரு தனியார் அல்லது அரச அமைப்பில கல்வி கற்பவர்களாக இருக்க வேணும்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இளம் பெடியள் தங்கட மோட்டார் சைக்கிளில ஒவ்வொரு பெண் பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு வந்ததும் ஏற்றிக் கொண்டு போனதும் தான்.

இதில் இன்னும் ஆச்சரியம். பாட்டிக்கு வரும் போது ஏற்றி வந்த பிள்ளை இன்னொரு மோட்டார் சைக்கிளில ஏற, அந்த மோட்டார் சைக்கிளில வந்த பிள்ளை இன்னொரு பெடியன்ர மோட்டார் சைக்கிளில் ஏறிப் போனதுதான்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமானது.

நிசப்தத்தினூடு குரல் கொடுத்த சாத்திரியார்; இது கலி காலம். இனி இந்த நாசமறுப்புகள் தான் நடக்கும் எனக் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகாலட்சுமி-கொக்குவில்

**களவும் கற்று மற என்பதன் அர்த்தம் என்ன வியா சரே?**

எமக்குத் தெரியாத விடயம் என்று எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காக களவும் கற்று மற எனக் கூறியிருக்கிறார்கள்.
களவு என்பது தவறான விடயம். அதைக்கூட கற்றிருந்தால் எம்மை யாரும் ஏமாற்றிவிட முடியாது.
அது தவறு என்பதற்காகவே அதைக் கற்று மற என்று கூறியிருக்கிறார்கள்.
இதை விட வேறு ஏதும் அர்த்தம் இருந்தால் அதையும் தெரியப்படுத்துங்களேன்.

விஜயதரன்-உரும்பிராய்

**சர்ச்சைக்குரிய சீன உளவுக்கப்பல் அனுமதிக்கும் இந்திய மீனவர்கள் கைதிற்கும் தொடர்பேதும் இருக்கிறதா வியாசரே?**

இந்த விடயத்தில் இலங்கை இருதயக்கொல்லி எறும்பே.
ஏனென்றால் இந்தியா-சீனா இவ் இரண்டு நாடுகளிடமும் அளவுக்கு மிஞ்சி கை நீட்டிவிட்டது இலங்கைக்கு.
இரு நாடுகளும் போட்டி போட்டு முடியுமானவரை கொடுத்து விட்டது.
இதில் இந்தியா கொஞ்சம் கண்ணியமாக நடந்து கொள்கிறது என்பது தெரிகிறது. ஆனால் சீனா இலங்கையை வேறு மாதிரி கையாள்வது மிகத் தெளிவாகத் தெரிகிறது.
இவ்விடத்தில் ஒரு பழமொழி, நக்கினார் நாவிழந்தார் என்பதையே கூறமுடியும்.

மதுவன்-மீசாலை

**உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் யாழ்.வீரன் விஜாஸ்காந் உள்வாங்கப்படாததன் நோக்கம் என்ன?**

விஜாஸ்காந்தை சர்வதேச கிரிக்கெட்டில் உள்வாங்காதது ஒரு பக்கம் இருக்கட்டும்.
முதலில் இலங்கை அணியை ஸ்திரப்படுத்தும் வேலைகளில் இறங்க வேண்டும்.
இப்போதைய இலங்கை அணிக்கு மனோபலம் சற்றும் இல்லை என்பது தான் உண்மை.
அந்தளவிற்கு அவர்களின் ஆட்டத்தில் பதட்டம் தெரிகிறது. அத்துடன் நாளுக்கொரு அணித்தலைவர் தெரிவும் நடக்கிறது.
இந்த ஸ்திரமில்லாத, பலம் இழந்த அணியில் விஜாஸ்காந் இடம் பெற்றிருந்தால் அவரின் கிரிக்கெட் வாழ்க்கை பாதித்துவிடும்.
அவர் அணியில் தெரிவு செய்யப்படாதது நன்மைக்கே.

“

இரண்டு பெரிய நாடுகளிடம் அடிவாங்கப் போகும் சிறிய நாடு பற்றி?

கணேஸ்-பருத்தித்துறை

“

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் யாழ்.வீரன் விஜாஸ்காந் உள் வாங்கப்படாதத் நோக்கம் என்ன?

மதுவன்-மீசாலை

கணேஸ்-பருத்தித்துறை

**இரண்டு பெரிய நாடுகளிடம் அடிவாங்கப்போகும் ஒரு சிறிய நாடு பற்றி?**

இரண்டு நாடுகளிடம் அந்த சிறிய நாடு ஒருநாளும் அடி வாங்காது.
மாறாக அந்த இரண்டு பெரிய நாடுகளிடையே சண்டையை மூட்டி விடும் வேலையை மாத்திரமே அந்த சிறிய நாடு செய்யும். செய்துகொண்டிருக்கும்.
ஒரு நாட்டிடம் கைநீட்டி கடன்வாங்கிவிட்டு இன்னொரு நாட்டை கடல் ஆய்வு செய்ய அனுமதிக்கும்.
அந்த பெரிய நாடுகள் இரண்டும் கடலிலும் தரையிலும் முட்டிமோத இதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அறிக்கை விடுவதுடன் இவர்களின் வேலை முடிந்து விடும்.

சிவகாமி-வதிரி


**அன்பின் வியாசரே திருக்கோணேஸ்வரத்தை பெரும் கோவிலாக்க இந்திய நிதியமைச்சர் உடன்பட்டாராமே?**

நல்லதுதான். பௌத்தத்தின் பிடியில் இருக்கும் எம் தேசத்தையும் சைவசமயத்தையும் மீட்கவல்ல பொறுப்பும் கடமையும் இந்தியாவிடம் மாத்திரமே உண்டு.
அந்த பொறுப்பு மிக்க தார்மிகக் கடமையை இந்தியா கையில் எடுக்க வேண்டும். இல்லையேல் சைவசமயம் இருந்த இடம் தெரியாமல் பௌத்த மயமாகிவிடும்.
ஒரு சிறிய விண்ணப்பம். சில விடயங்களை கவனமாகக் கையாள வேண்டும். அதாவது திருக்கோணேஸ்வரம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. தமிழ் மன்னர் இராவணனின் கால் தடம் பட்ட புனிதபூமி.
அந்த புனிதத்தை கெடுத்துவிடாது நிர்மாணம் நடந்தால் நல்லது.

திருவாசகன்-மாதகல்

**நாட்டில் மனிதாபிமானம் எப்படி இருக்கிறது வியா சரே?**

வீதியில் போகும் போது பொலிஸ் நிற்கிறது என்பதைக்கூற கெட் லைட்டை ஒளிர விட்டு அலேட் செய்துவிட்டுப் போவதுடன் முடிந்து விடுகிறது எம்மவர்களின் மனிதாபிமானம்.
வீதியில் விபத்து ஒன்று நடந்துவிட்டால் அம்புலன்ஸை அழைக்கவும் விபத்துக்குள்ளானவர்களுக்கு முதலுதவி அளிக்கவும் இருக்கும் ஆட்களைவிட அதை ஒளிப்படம் எடுக்கும் ஆட்களே அதிகம்.
எங்கே சென்று கொண்டிருக்கிறது மனிதனின் மனிதாபிமானம். அனைத்திற்கும் எனக்கேன் வீண்சோலி என விலகிவிடுவது ஒரு நாளும் நல்ல தீர்வை தந்து விடாது என்பதை மனிதன் புரிந்து கொள்ளாத வரை அவன் திருந்த வாய்ப்பில்லை.




அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: அடிமைப்பெண்**
**இசை: கே.வி.மகாதேவன்**
**பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்**



ஜீவநதியாய் வருவாள்
என் தாகம் தீர்த்து மகிழ்வாள்
தவறினைப் பொறுப்பாள்
தர்மத்தை 'வளர்ப்பாள்

---

தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காக்கின்றாள்

ஜீவநதியாய் வருவாள்
என் தாகம் தீர்த்து மகிழ்வாள்
தவறினைப் பொறுப்பாள்
தர்மத்தை வளர்ப்பாள்
தரணியிலே வளம் சேர்த்திடுவாள்
தாயில்லாமல் நானில்லை

தூய நிலமாய் கிடப்பாள்
தன் தோளில் என்னை சுமப்பாள்
தன்மையில்லாமல் நான் மிதித்தாலும்
தாய்மையிலே மனம் கனிந்திடுவாள்

தாயில்லாமல் நானில்லை

மேக வீதியில் நடப்பாள்
உயிர் மூச்சினிலே கலந்திருப்பாள்
மலைமுடி தொடுவாள், மலர்மணம் தருவாள்
மங்கள வாழ்வுக்கு துணையிருப்பாள்
தாயில்லாமல் நானில்லை

ஆதி அந்தமும் அவள்தான்
நம்மை ஆளும் நீதியும் அவள்தான்

அகந்தையை அழிப்பாள்
ஆற்றல் கொடுப்பாள்
அவள்தான் அன்னை மகா சக்தி
அந்த தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காக்கின்றாள்...

# கோபம் எனும் கொடிய அரக்கன்

இன்று பலருக்கும் முனுக்கென்றால் கோபம் வந்துவிடுகிறது. குறிப்பாக பொறுமை, சகிப்புத்தன்மையெல்லாம் பழக்கப்படுத்தப்படாத இன்றைய தலைமுறையினருக்கு. தான் சொல்வதைப் பிறர் கேட்கவில்லை, நினைத்தது நடக்கவில்லை, ஏமாற்றம், இழப்பு, இயலாமை, அதிகாரம் என எல்லா உணர்வுகளையும் சிலருக்குக் கோபமாக மட்டுமே வெளிப்படுத்தத் தெரிந்திருக்கிறது. கோபம் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் நமக்குத் தரும் பிரச்சினைகள் அதிகம். கூடவே வீடு, உறவுகள், நண்பர்கள், அலுவலகம் எனச் சுற்றிலும் நம் கோபம் நம்மீதான மதிப்பைப் பிறர் இழக்கவே வழிவகுக்கும்.

கோபம் தவறா என்றால், சரியான காரணத்துக்காக, சரியான நேரத்தில், சரியான கோணத்தில், உரிய நபரிடம் வெளிப்படுத்தும் கோபம் சில நேரங்களில் அனுமதிக்கத்தக்கது. ஒரு வகையில், நமக்கான உரிமைகளைப் பெறவும் கோபம் உதவும்.?

ஆனால் அர்த்தமற்ற, அதிகப்படியான கோபம் நம்மை அனைத்து வகையிலும் பாதிக்கக்கூடியது. அது நமக்கே தெரியாமல் நம் மற்ற உணர்வுகளை அபகரித்து, அனைத்தையும் கோபமாக மட்டுமே வெளிப்படுத்த வைக்கும். உதாரணமாக, ஓர் உதவி வேண்டும் என்றால் அதை கேட்கவிடாமல், பசி ஏற்பட்டால் சாப்பிடத் தோன்றாமல், அழுகை வந்தால் அழ விடாமல்... அனைத்தும் கோபமாக மட்டுமே வெளிப்படும்.?

இன்று பல துறைகளிலும் மிகுந்த அழுத்தத்துடன்தான் பெரும்பான்மையினர் பணிபுரிகின்றனர். அடக்கி வைத்திருக்கும் அந்த அழுத்தத்தை வீட்டில் வெளிப்படுத்துவார்கள் பலர். சிலரோ, வீட்டில் உள்ள பிரச்னைகளை அலுவலகத்தில் வந்து கோபமாக வெடிப்பார்கள்.

இருக்கும் கோபம் குறையவும் வாய்ப்புண்டாகலாம். மேலும், கோபம் தலைக்கேறும் நேரத்தில் 60 நொடிகள் மூச்சுப்பயிற்சி மேற்கொள்வதும் கோபத்தை குறைக்கும் முக்கியமான முறை. மெதுவாக மூச்சை உள்ளிழுத்து, மெதுவாக வெளியிடும் போது... மனதில் உள்ள அழுத்தம், கோபமெல்லாம் வெளித்தள்ளப்படும்.?

கோபப்படும்சூழல்களை டைரியில் எழுதிப் பழகலாம். எதனால் அந்தக் கோபம் ஏற்பட்டது, அதை யாரிடம், எப்படி வெளிப்படுத்தினீர்கள், கோபத்தால் கிடைத்தது, இழந்தது என்ன என்றெல்லாம் எழுதி, அதை கோபம் தணிந்த பின்னர் படித்துப்பார்க்கும்போது, உங்கள் கோபம் அர்த்தம்கொண்டதா, அர்த்தமற்றதா என்பதெல்லாம் தெரியவரும். கோபத்தைக் குறைக்க தன்னிச்சையாகத் தூண்டப்படுவீர்கள்.?

ஒரு குறிப்பிட்ட நபரிடம் கோபப்படும்போதோ, குறிப்பிட்ட பிரச்சினையில் கோபப்படும்போதோ... மூன்றாம் நபர் பார்வையில் இருந்து உங்கள் கோபத்தை ஆராய்ந்து பாருங்கள். அதில் உள்ள சரி, தவறு புரியும்.?

உறவுப் பேணலையும், பணியிடத்தில் மதிப்பையும் கோபம் கெடுக்கும். வீட்டில் கோபப்பட்டாலாவது சரிசெய்துகொள்வதற்கு வாய்ப்புள்ளது. காரணம், அவர்கள் நம் உறவுகள். நம்மை மன்னித்துவிடுவார்கள். ஆனால், பணியிடத்தில் யார் மீதாவது கோபத்தை வெளிப்படுத்தினால் உங்கள் மதிப்பு குறைந்துபோகும். கோபப்படும்போதெல்லாம் நம் தசைகள் இறுகுவதை உணரலாம். அது கோபத்தை இன்னும் அதிகமாக்கும். எனவே கோபப்படும் நேரத்தில் கை கால்களை நேராக நீட்டுவது, எழுந்து நடப்பது என உடலுக்கு அசைவைக் கொடுப்பதன் மூலம் தசை இறுக்கத்தைத் தளர்த்தலாம், கூடவே கோபத்தையும்.

பதின் பருவத்தினரைப் பொறுத்தவரை, தற்கொலை எண்ணத்தின் ஆரம்பப்புள்ளியாகக்கூட கோபமே இருக்கும்; அவர்களுக்குச் சமூகம் மீது அதிகமாகக் கோபம் வருகிறது. வீட்டில் எப்போதும் இணையிடம், பிறரிடம் எனக் கோபப்பட்டுக் கொண்டே இருக்கும் பெற்றோரைப் பார்க்கும் பிள்ளைகளுக்கு, கோபம் என்பது தவறான



எங்கு நமக்கான அதிகாரம் இருக்கிறதோ, அங்கு கோபம் பாயும். இப்படி ஓர் இடத்தில் உள்ள பிரச்னைக்கான கோபத்தை மற்றொரு இடத்தில் வெளிப்படுத்தும்போது, அந்தக் கோபத்தில் எந்த நியாயமும் இருக்காது என்பதுடன், அந்த அதிகாரமும் துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறது.?

கோபத்தை கையாள, தினமும் காலையில் பிரணாயாமம் செய்வது கைக்கொடுக்கும். இதைச் செய்யும்போது மனம் அமைதியாகும். அப்போது மனதில்


வெளிப்பாடு என்று மனதில் பதியாது. மாறாக, கோபப்பட்டுக் கத்துவது தவறில்லை என்றே உள்வாங்குவார்கள். எனவே, குழந்தைகள் முன் பெற்றோர் ஆங்கிரி பேர்ட்ஸாக உலாவுவதைத் தவிர்க்க வேண்டும்.?

யோகா, வொர்க் அவுட்ஸ் என உடற்பயிற்சிகளை வழக்கமாக்கிக்கொள்வது, நேரம் தவறாமல் உண்பது, எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது போன்ற வாழ்வியல் முறைகளும் கோபம் உங்களை அண்டாமல் பார்த்துக் கொள்ளும்.?

**தூர வைப்போம் கோபத்தை!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய சோறு



அறுபது வயதைக் கடந்த பிறகும் திடகாத்திரமாக இருக்கும் கிராமத்துப் பெரியவர் யாரிடமாவது கேட்டுப்பாருங்கள், உங்கள் ஆரோக்கியத்துக்குக் காரணம் என்ன? என்று. சட்டென்று பழைய சோறு, கம்பங் களிதான் வேற என்ன? என்று பதில் சொல்வார். பழைய சாதம் நம் முன்னோர்களின் உடல்நலத்துக்குப் பக்கபலமாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. பல நூறு ஆண்டுகளாக பழைய சோறு சாப்பிட்டு வந்த பழக்கம், நம் பாரம்பரியத்துக்கு உண்டு. சமீபத்தில், அமெரிக்கன் நியூட்ரிஷன் அசோசியேஷன் (American Nutirition Association) பழைய சோற்றின் பெருமைகளையும் பலன்களையும் பட்டியலிட்டிருந்தது. அதன்பிறகு விழித்துக்கொண்ட இன்றைய தலைமுறை, கூகுளில் பழைய சாதத்தைத் தேட ஆரம்பித்திருக்கிறது.

'பழைய சாதம், பழைய சோறு, பழஞ்சோறு , ஏழைகளின் உணவு, ஐஸ் பிரியாணி' என்றெல்லாம் அழைக்கப்படும் இந்த உணவு, அமெரிக்கர்களுக்கும் பிற நாட்டினருக்கும் வேண்டுமானால் அதிசயமாக இருக்கலாம். நம் முன்னோர்களுக்கு அன்றாடம் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன இதம் தரும் காலை உணவு. மதியம் வடித்து, மீந்துபோன சாதத்தில் நீர் ஊற்றிவிடுவார்கள். அடுத்த நாள் அது பழைய சாதமாகிவிடும்' என்று இதன் எளிய செய்முறையை விளக்கலாம் தான். இதுகூடத் தெரியாதா எங்களுக்கு?' என்று சிலர் கோபப்படவும் கூடும். ஆனால், எதைச் சொன்னாலும் செய்முறை விளக்கம் கேட்கும் இளைய தலைமுறைக்கு, பீட்சா, பர்கரிலேயே காலம் தள்ளிக்கொண்டிருக்கும் இளைய பட்டாளத்துக்காகவாவது இதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. பழைய சோறு கிடக்கட்டும், சோற்றை ஊறவைத்திருக்கும் தண்ணீர் அத்தனை ருசியானது. எத்தனையோ மருத்துவக் குணங்களைக்கொண்டது.

நீச்சத்தண்ணி என்றால், பழைய சோற்றுத் தண்ணீர், நீராகாரம் என்று அர்த்தம். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும் குளிர்ச்சியோடு, எனர்ஜியையும் சேர்த்துத் தரும் அற்புத ஆகாரம்தான், நீராகாரம்.

தனியாக ஃப்ரிட்ஜில் வைத்துக் குளிரூட்டவேண்டியதில்லை என்பது இதன் சிறப்பு. அடுக்களையில் ஓர் ஓரமாக பாத்திரத்தில் வைத்து மூடி வைத்தாலே போதும். காலையில், குளிரக் குளிர பழைய சோறு தயார். மண் பாத்திரத்தில் வைத்திருப்பது கூடுதல் சிறப்பு. தொட்டுக்கொள்ள ஒரு வெங்காயம், பச்சைமிளகாய் அல்லது ஊறுகாய் போதும்.

பழைய சோற்றில் மிக அதிக அளவில் புரதச்சத்து, இரும்புச்சத்து, பொட்டாசியம் ஆகியவற்றை அள்ளி அள்ளித் தருகிறது இந்த அட்டகாசமான சாதம். உதாரணத்துக்கு ஒரே ஒரு விடயம், வடித்த சாதத்தில் 3.4 மி.கி இரும்புச்சத்து இருக்கிறது என வைத்துக்கொள்வோம். அதுவே, பழைய சாதமாகும்போது, இரும்புச்சத்தின் அளவு 73.91 மி.கிராமாக இருக்கும். ஆக, காலையில் சாப்பிட ஏற்ற சத்தான உணவு பழைய சோறு.

அமெரிக்கன் நியூட்ரிஷன் அசோசியேஷன் பட்டியலிட்டிருக்கும் பழைய சோற்றின் நன்மைகள்...

- உடலுக்கு நன்மை தரும் பக்றீரியாக்கள் அபரிமிதமான அளவில் இதில் இருக்கின்றன.
- காலையில் இதைச் சாப்பிடுவதால், வயிறு தொடர்பான நோய்கள் குணமாகும் உடலில் அதிகமாக இருக்கும் உடல் உஷ்ணத்தைப் போக்கும்.
- இந்த உணவு, நார்ச்சத்து தன்மையையும் கொண்டிருப்பதால், மலச்சிக்கலை நீக்கும் உடல் சோர்வை விரட்டும்.
- இரத்த அழுத்தம் சீராகும் உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தணியச்செய்யும்.

- முழு நாளைக்கும் நம்மை ஃப்ரெஷ்ஷாக உணரவைக்கும்.
- ஒவ்வாமைப் பிரச்சினைகளுக்கும், தோல் தொடர்பான வியாதிகளுக்கும் நல்ல தீர்வுதரும்.
- எல்லாவிதமான வயிற்றுப் புண்களுக்கும் பழைய சோறு வரப்பிரசாதம்.
- புதிய நோய்த்தொற்றுகள் எதுவும் ஏற்படாமல் தடுக்கும்.
- வனப்பைத் தரும் இளமைத் தோற்றத்தைத் தக்க வைக்க உதவும்.

பழைய சோறு இருக்கும் இடம், ஆரோக்கியம் குடியிருக்கும் இடம். தமிழர் பாரம்பரியம் ஆரோக்கியத்தைப் போற்றிப் பாதுகாத்துவந்தது என்பதை நிரூபிக்கும் மற்றுமோர் ஆதாரம், பழைய சோறு. பாரம்பரியத்தைப் போற்றுவோம்

# மெஸ்ஸியும் தங்கப்பந்தும்!

பிரஞ்சுச் செய்தி இதழ் ஒன்று 1956 இலிருந்து சிறந்த காற்பந்து வீரரைத் தேர்வு செய்து 'பலோன் டோ' (Ballon d'Or) என்ற பெயரில் விருது ஒன்றை வழங்கி வருகிறது. தரவரிசையில் முதல் 100 இடங்களைப் பிடிக்கும் அணிகளின் நாடுகளைச் சேர்ந்த 100 பத்திரிகையாளர்கள் இணைந்து வாக்களித்து அந்த சீசனுக்கான சிறந்த வீரரைத் தேர்ந்தெடுப்பார்கள். காற்பந்து உலகின் உயரிய விருதாக மதிக்கப்படும் இந்த 'பலோன் டோ' விருதை 8ஆவது முறையாக வென்றிருக்கிறார் அர்ஜெண்டின வீரர் மெஸ்ஸி.


2009 இல் முதல் முறையாக 'பலோன் டோ' விருதை வென்ற போது, இந்த விருதை வெல்வேன் என எதிர்பார்க்கவே இல்லை. இதற்கு முன் இந்தத் தங்கப்பந்து தலைசிறந்த பல வீரர்களின் கையில் இருந்திருக்கிறது. இப்போது நான் வென்றிருக்கிறேன். இது எனது காற்பந்து வாழ்வின் மிக முக்கியமான தருணம் என்று நெகிழ்ச்சியின் உச்சத்தில் நின்றார் இளம்வீரர் மெஸ்ஸி.

இப்போது, 8 ஆவது முறையாக இந்த விருதை வென்றிருக்கும் இந்தச் சமயத்தில், "உண்மையைச் சொல்லப்போனால் நான் 'பலோன் டோ' விருதைப் பற்றியெல்லாம் யோசிப்பதையே நிறுத்திவிட்டேன். நான் இதைப் பிரதானமானதாக நினைக்கவில்லை. நான் எல்லாவற்றையும் சாதித்துவிட்டேன். இதுதான் என்னுடைய கடைசி 'பலோன் டோ' விருதாகவும் இருக்கக்கூடும். இதுவே எனக்கு மகிழ்ச்சிதான்" எனவும் பேசியிருக்கிறார் மெஸ்ஸி.

உச்ச இடத்தை அடைவது எளிது. ஆனால், அங்கேயே 10-15 ஆண்டுகளுக்கு நின்று தக்கவைத்துக்கொள்வது எளிதல்ல. நாங்கள் அதைச் செய்திருக்கிறோம். பல நல்ல நினைவுகளை இந்தக் காற்பந்து உலகம் எங்களுக்குக் கொடுத்திருக்கிறது என தன்னுடைய போட்டியாளரான ரொனால்டோ குறித்து அவ்வளவு நெகிழ்ச்சியாகப் பேசியிருக்கிறார் மெஸ்ஸி.

உலகக்கோப்பை மரடோனாவே மீண்டும் நிகழ்த்திப் பார்க்க நினைத்த கனவு ஜாலம். ஆனால், மெஸ்ஸியும் மரடோனாவும் கைகோத்துக் களமிறங்கிய 2010 உலகக் கிண்ணத்தில் கூட அவர்களால் சாதிக்க முடியவில்லை. அந்த ஏக்கத்தை கடந்த ஆண்டுதான் மெஸ்ஸி தீர்த்து வைத்தார்.

அதற்காகத்தான் மெஸ்ஸிக்கு அந்த விருது. அதுவும் மரடோனாவின் பிறந்த நாளான ஒக்டோபர் 30 ஆம் திகதியன்று வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதி பாயுதே

நாட்டுக்கு நாடு போர் மோகங்கள்
இஸ்ரேல் காசா நாடு பதறுகின்றதே
யுத்தம் பூமி அழிவைச் சந்திக்குமே
மனித குருதிகள் பாய்ந்தோடுகின்றதே

உலகம் என்ன வேடிக்கை பார்க்கிறதா
வல்லரசுகள் கண்மூடி கிடக்கின்றதே
உலக யுத்தம் தொடங்கினால் எமது நிலையென்ன
கையேந்தும் நிலை கவலையை தருகின்றதே

காசா மனித அழிவின் விளிம்பில் நிற்கின்றதே
இஸ்ரேல் என்ன மனித வதை நாடுகிறதே
நவீன கண்டுபிடிப்புகளால் மனித அழிவு வருகிறதே
விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாமல் போகுமே
உலகம் இதை எண்ணிப் பார்க்குமா
நாட்டை ஆக்கிரமிக்க என்ன சர்வதிகாரமா
ஐக்கிய நாடுகள் சபை என்ன செய்கிறதே
எமது அழிவிலும் கண்மூடித்தானே இருந்தனர்
உலக அழிவிக்கு இட்டு செல்ல வழிவகுக்குமே

**எஸ்.பி.தனா,**
**தெல்லிப்பழை.**



## ஆளுகை எமக்கே

காலத்திற்கும் ஆளும் வர்க்கம்
தாமென நிலைபெறச் செய்ய
அதிகாரத்தின் ஆதிக்கம் இங்கு
ஆட்சி செய்கிறது
பணத் திமிரென்று
பழிபாவங்கள் புரிகின்றது
நீதியின் குரல் நசுங்கி
ஈனஸ்வரமாக கதறுகிறது
அண்டிப் பிழைப்போர்
அதர்மத்துக்கு வாலாட்டுகின்றனர்
ஏதுமறியா ஏழை அப்பாவிகள்
அதிகார வெறிக்கும்
பண வலிமைக்குமிடையில்
வாழத் திணறுகின்றனர்
ஆனாலும் ஏழை அப்பாவிகளை
உசுப்பேத்தி மோதச் செய்து
தம் ஆதிக்கத்தை
நிலைக்க வைக்கின்றனர்
நாட்டின் பொருளாதாரத்தை
ஏப்பமிடும் ஆட்சியர்
பொருளாதார வரட்சியென
நாடுநாடாய் யாசிக்கின்றனர்.

சி.இ.அன்புதுரை.
மானிப்பாய்.



## பிரளயம்

இயற்கை என்று வந்தது
இமயம் தொட்டு நின்றது
மண்ணும் விண்ணும் கொண்டது
மலர்ச்சி பல கண்டது
பருவம் வந்து மகிழ்ந்தது
பயனும் கண்டு திளைத்தது
உருவம் என்று தந்தது
புருவம் உயர்ந்து நின்றது
அனைத்தும் படைத்துக் களைத்தது
அணைத்தும் வெற்றி கொண்டது
எண்ணம் பல சேர்ந்தது
திண்ணம் பெற்றுத் திகழ்ந்தது
சொல்லும் செயலும் விண்டது
சொர்க்கபூமி நிலைத்தது
வந்த வினையும் அறுத்தது
வல்ல கொடுமையும் அழித்தது
இன்னல் பல எழுந்தது
இடர்கள் கண்டு துடித்தது
மின்னல் குண்டும் தெறித்தது
மிடிமை உயிர் பறித்தது
இதயம் விட்டுத் தொலைந்தது
உதயம் ஒன்று தெரிந்தது

பிறேமா தியாகலிங்கம்,
யாழ்ப்பாணம்.



## மௌனத்தின் தேடல்- 693




## துயரின் வலி

துன்பதுயரங்கள் வந்திடும்
வேளையில் தோளோடு தோள்
சேர்ந்து தோள் கொடுத்திடும்
பாங்கினைப் பாரீர் கவலைகள்
வந்திடும் வேளையில்
கட்டியணைத்திடும் கரங்களுக்கு
துன்பதுயரங்களின் வலி புரியும்
கண்ணீரில் கரைந்திடுமா?
கவலைகள் யாவும் இல்லையே
காலமெல்லாம் எம்
உள்ளத்தில் உறைந்திடுமே.

ஆ.செல்வி, திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 694



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பசிக்குப் பலி

அநியாயப் பறிப்புக்களும்
அவலமாய் அழும்
கதறல்களும்
நேற்று நாமும் தான்
இன்று வேறுநாட்டு
மாந்தர்கள்
நாளை எந்த தேசத்து
மனிதர்களோ!
ஏனென்றால் ஆதிக்கப் பசி
அடங்கியதாயில்லை

**சி.இ. அன்புதுரை, மானிப்பாய்.**

## மனுநீதி

மனுநீதி
மரணித்ததோ
நல்லிணக்க நீதியும்
நலிந்த நீதியானது
இன மொழி நீதியும்
இன்னாச்சொல் நீதியாகி
ஆன்மின நீதி
அழிவு நீதியாகி
ஆழி சூழ் தீவினில்
துறவற நீதியது
அதவழி அழிவு நீதியாகி
அன்பெனும் அமைதி கெட
தெளிவற்ற நீதி பேசி
நீதிக் கரங்களுக்கு
விலங்கிடும் நீதி
விலங்கின மன நீதி
நீங்கி நீதி நெறியினை
காப்போம்

தமிழினியன், வவுனியா.

## மனிதமும் புனிதமும்

இதயததை நெருடி வதைப்பது
இடிந்து சரிந்தவை மட்டுமன்று
மனிதநேயம் குறைவதும்தான்
புனிதமான மதங்கள் போதிக்கும்
அன்பிங்கு அருகி வருவதும்
நம்பிக்கையைக் குறைக்கின்றது
அருந்த தண்ணீர் கிடைக்காத போதும்
அருவியாகும் கண்ணீர் தண்ணீராகின்றது.

**க.நாகராசா, நுணாவில்.**

## வல்லரசுகளின் திட்டம்

வளர்முக நாடுகளை வளரவிடாது
தீவிரவாதத்தை அங்கு விதைத்து
போராயுதங்களை விற்பனை செய்து
நாட்டையும் மக்களையும் அழித்து
மயான பூமியாக மாற்றுவதே
வல்லரசுகளின் திட்டம்

**பிரமன், கொக்குவில்.**


## ஏதிலிகள்

போரின் பேரவலத்தால் சொந்த பந்தமிழந்து
இல்லிடமிழந்து ஏதிலிகளாய் கண்ணீரும் கம்பளையுமாய்
கதறிக் கலங்கிடும் அவலைகளுக்கு ஆறுதலித்திட
இவ்அவனியில் ஆண்டவன் அன்றி வேறு யாருளரோ?

**சி.மகாலட்சுமி, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா



காலத்தின் பதிவு 83

ஆனால் அப்படித் தங்களிருவரையும் பார்த்த பலவர்மன் அடுத்தபடி நடந்து கொண்ட முறை அவனுக்குப் பெரும் வியப்பையும் ஓரளவு குழப்பத்தையும் அளிக்கவே மஞ்சளழகியின் மீது தன் கண்களைத் திருப்பினான் இளையபல்லவன். அவன் முகத்தில் வியப்பும் குழப்பமும் விளைந்து கிடந்ததை அவள் கண்டாள். அவன் விழிகளில் எழுந்து கிடந்த கேள்வியையும் கண்டாள். ஆனால் பதிலேதும் சொல்லவில்லை அவள். பதிலுக்குப் பதில் சோகப் பெருமூச்சொன்றையே வெளியிட்டாள்.

அந்தப் பெருமூச்சிலிருந்தும் அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து அவள் கையொன்று தன் கையை அழுத்திப் பிடித்ததிலிருந்தும் அவள் பெரும் வேதனைக்குட்பட்டிருக்கிறாளென்பதை அறிந்து கொண்ட இளையபல்லவன், அவளிடம் தன் உள்ளத்தே எழுந்த அனுதாபத்தால் தன் இடது கையைப் பிடித்திருந்த அவள் கையைச் சற்றே தன் வலது கையால் அழுத்திக் கொடுத்தன்றி, தன் இடது கையை விடுவித்துக்கொண்டு அதை அவள் இடுப்பைச் சுற்றி வளையவிட்டு வலது கையை அத்துடன் கோத்துச் சுற்றிலும் ஒரு வளையத்தை ஏற்படுத்தினான்.

புருஷனுடைய அரவணைப்பும் பாதுகாப்பும் பெண்களுக்கு எத்தனை இன்றியமையாதவையென்பதை அந்தச் சில விநாடிகளில் உணர்ந்து கொண்டாள் அக்ஷய முனைக் கோட்டை அழகி. அத்தனை பாதுகாப்பிலிருந்தும் தன் வாழ்வில் ஏற்படக்கூடிய அபாயங்களை அவள் இதயம் எண்ணிப் பார்த்து நடுங்கியது. மனம் சொன்ன கதை பொய்க்கதை அல்லவென்பதை புத்தி மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியது.

காலைத் தொட்டுச் செல்லும் அலைபோல் அப்பொழுது அணைத்துள்ள புருஷனும் தன்னைத் தொட்டுச்சென்றுவிடுவான் என்பதை மறுபடியும் மறுபடியும் அவள் எண்ணவே செய்தாள். அந்த எண்ணம் எழுந்த அந்த நிலையும் தொட்டுச் சென்றுவிடக்கூடிய அந்த புருஷனுக்கு ஏற்படக்கூடிய அபாயமே அவள் மனத்தில் ஓங்கி நின்றது. பெண் மனத்தின் உயர்வு அவளைப் பெரும் வியப்புக்குள் ஆழ்த்தியது. இவர் என்னைத் தொட்டு விட்டுச் சென்றுவிடுவார் என்பது எனக்குத் தெரிகிறது.

இருப்பினும் இவருக்கு என் தந்தையால் ஏற்படும் ஆபத்தே எனக்குக் கவலையை அளிக்கிறது. எனக்குத் துரோகம் செய்யக்கூடிய இவருக்கு ஏன் என் மனம் இரங்குகிறது? பெண் ஆணுக்கு அன்பளித்துச் சீரழியவே பிறந்தவளா? சீரழிந்தாலும் அவன் சீரையும் உயிரையும் காப்பாற்றக் கடமைப்பட்டவளா? அப்படித்தான் தோன்றுகிறது. நல்ல ஜன்மம் பெண் ஜன்மம்! தியாகமே அதன் கடமையா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள் மஞ்சளழகி. பதில் அவளுக்குப் புரிந்திருந்தது. கடமை அதுதானென்பதை உணர்ச்சிகள் சந்தேகமற உணர்த்தின. அந்த விநோத உணர்வை எண்ணி அவள் மெல்ல நகைத்தாள். நகைத்த வண்ணம் தன் தலையை அவன் தோள்மீது தைரியமாகச் சார்த்தியும் கொண்டாள்.

## பெண் ஜென்மம்

பலவர்மனும் கொள்ளைக்காரரும் நடந்துகொண்ட விசித்திர முறையைப் பற்றித் தனது கண்கள் கேட்ட கேள்விக்குப் பதிலேதும் சொல்லாமல் மஞ்சளழகி சிந்தனையில் இறங்கியதும் பிறகு நகைத்ததும் தன்மீது தலையைச் சாய்த்துக் கொண்டதும் இளையபல்லவனுக்கு விந்தையாயிருக்கவே அவன் கேட்டான். "ஏன் நகைக்கிறாய் மஞ்சளழகி?" என்று.

செவ்விய உதடுகளை விரித்துச் சொன்னாள் அவள், "என் ஜன்மத்தை நினைத்துச் சிரித்தேன்." என்று.

"ஏன், உன் ஜன்மத்திற்கு என்ன?"

"பெண் ஜன்மம்." என்றாள் அவள்.

"அதென்ன குறைவா?" என்று கேட்டான் அவன்.

"குறைவுதான்?" என்றாள் அவள்.

(தொடரும்...)

---

## எனது பார்வையில் கண்ணதாசன்

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 29



**"ஆயின் இவ்வழுகை உலகியல் துன்பத்தின் எதிரொலியன்று: தெளிவின்மையின் வெளிப்பாடுமன்று. இறையருளை முற்றாகப் பருகி நிறைவு பெற முடியாத அவ்வமுதினை மேலும் மேலும் பருக உள்ளம் நெகிழ்ந்து ஓடும் உணர்வே!"**

(பக்தி இலக்கியம். பக்கம் -265)

என்று முடிவு கட்டுகிறார் டாக்டர் ப.அருணாசலம்.

பக்திப் பாடல்களில் இருவகை உட்கோளினைக் காணலாம்.

முதலாவது இறைவனிடமிருந்து அருள் பெறுவது. இரண்டாவது அருளாக இறைவனையே பெறுவது.

இறை வட்டத்திலோ, உலகியல் வட்டத்திலோ நின்று சமயப்புலவன் பாடும் பாடல்களில் வரும் செய்திகளெல்லாம் புலவனின் தனி வாழ்க்கை நிகழ்ச்சிகளா?

இந்த ஐயம் எழுவது இயல்பு.

**"பாலனாய்க் கழிந்த நாளும்**
**பனிமலர்க் கோதை மார்தம்**
**மேலனாய்க் கழிந்த நாளும்**
**மெலிவோடு மூப்பு வந்து**
**கோலனாய்க் கழிந்த நாளும்**
**குறிக்கோ விலாது கெட்டேன்."**

என்ற அப்பர் பாட்டு, அவரின் நேரடி வாழ்க்கையின் நிகழ்ச்சியென்று கொள்ள முடியாது.

**"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்**
**தெவ்வத்**
**தடந்திரையால் எற்றுண்டு**
**பற்றொன் றின்றிக்**
**கனியைநேர் துவர் வாயார்**
**என்னுங் காலால்**
**கலக் குண்டு காமவான் சுறவின்**
**வாய்ப்பட்டு..."**

(திருச்சதகம் : 27)

தான் தவிப்பதாக மணிவாசகர் பாடுவது, அவர்தம் தனி வாழ்க்கை நிகழ்ச்சியென்று கருதுவதற்கில்லை.

இவர் தம் வாழ்க்கையின் முற்பகுதி உலகியல் வாழ்க்கை என்றும் பிற்பகுதி இறையியல் வாழ்க்கை என்றும் முடிவு செய்திட முடியாது.

இந்தப் பாடல்கள், சமுதாய - பொது வாழ்க்கைக் கூறுகளைத் தம் மேலிட்டுக் கூறுவனவாதல் வேண்டும்.

இது ஆன்மநேய ஒருமைப்பாடு.

உலகியற் துன்பத்தைத் துன்பமாகவே கருதிப் பாடும் உயர் பண்பு அது.

தாம் பெற்ற இன்பத்தை உலகம் பெற்ற இன்பமாகவும் உலகம் பெற்ற துன்பத்தைத் தான் பெற்ற துன்பமாகவும் கருதிப் பாடும் உயர்ந்த மனநிலையின் வெளிப்பாடே திருவாசகத்தின் மணிவாசகம்.

உலகியற் துன்பத்தைத் தன் மேல் ஏற்றித் தன்னை ஒரு குறியீடாக்கிக் குறிக்கோளைக் காட்டுகிறார் மாணிக்கவாசகர்.

சபாபதி நாவலர் சொல்வதைப் போல.

**"திருமுறை இலக்கியங்கள் திரோதானம் நீங்கிய அருள் நாத ஒலியும் மற்றக் கலைப் புலவர்கள் பாடிய பாட்டுகள் மாயநாத ஒலியு மாதலின் சிறிதும் தம்முள் ஒவ்வாத மாணிக்கமும் செங்கல்லும் போல்வன."**

(திராவிட பிரகாசிகை: பக்கம் -172)

திருவாசகத்தில் அருள் நாத ஒலி கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

தேவாரக் கவிஞர்கள் மூவர் பாடிய பாடல்களெல்லாம், பெரும்பாலான கோவில்களை - புறக் காட்சிகளை - பன்னிப் பாடுவன.

மாணிக்கவாசகரிடமோ அகவய உளைச்சலே அதிகம் பாடு பொருளாகிறது.

எனவேதான் ஜி.யு.போப் போன்றவர்கள், மொழிபெயர்ப்பதற்குத் தேவையான உயிர்ப்பு திருவாசகத்தில் உண்டென்று தெரிவித்தார்கள்.

தேவாரக் கவிஞர்கள், புராண நிகழ்ச்சிகளைப் பக்திப் பாடல்களில் மிகுத்துப் பாட, மணிவாசகர் பாட்டிலோ, புராண உணர்ச்சி கவிதையையோ கருத்தையோ கீறாத அளவுக்கே இடம்பெற்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

372

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# கேள்வி – பதில்கள்

**உயர்குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் எதிர்காலத்தில் அதனை நிறுத்திக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா?**

ஆம், நிறுத்திக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக அதிகரித்த உடல்நிறை உடையவர்கள் நிறை குறைப்பு செய்யும் பொழுது இது சாத்தியமாகின்றது. சில சிறுநீரக நோய் நிலைகள் கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுதும் இது சாத்தியமாகின்றது. பிரசவ காலத்தில் தற்காலிக உயர் குருதி அமுக்க நிலை ஏற்படுபவர்களுக்கு பிரசவத்தின் பின்னர் இதற்கான மருந்துகளை நிறுத்தக் கூடியதாக இருக்கிறது.

உயர்குருதி அமுக்க நிலை உள்ளவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி ஒழுங்கான உடற்பயிற்சி, உணவு முறைகளில் மாற்றம், மன அமைதி வழிமுறைகள் போன்றவற்றை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்களின் மருந்துகளின் அளவைக் குறைத்துசில சமயங்களில் நிறுத்திக் கொள்ளக் கூடிய நிலைகளும் ஏற்படலாம். சில ஓமோன் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அவர்களின் அடிப்படை நோய் நிலை கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுது அதிகரித்த குருதி அமுக்க நிலையும் தானாக குறைந்துவிடும்.

இவர்களுக்கான மருந்துகளையும் நிறுத்திக் கொள்ள முடியும். உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் தன்னிச்சையாக தாமாக இதற்கான மருந்துகளை நிறுத்திக் கொள்வதோ மாற்றிக் கொள்வதோ ஆபத்தானது. மருத்துவக்குழுவின் ஆலோசனையுடனேயே இவை செயற்படுத்தப்பட வேண்டும். உயர் குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்த முடியாது.

எனவே அதனை பாவிக்காமலே இருந்து விடுவோம் என்று எண்ணிக்கொள்வது ஒரு தவறான ஆபத்தான சிந்தனை ஆகும். ஒருவரின் குருதி அமுக்கம் அதி கரித்துக் காணப்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரைகளின் பங்கு மிக முக்கியமானதாகும்.



**சத்துமாப் பேணிகளோ விற்றமின் குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை என்ன?**

எமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் ஆரோக்கியமான, இயற்கையான உணவுப்பொருட்களான தீட்டாத அரிசிமா, ஊர்க் கோழி முட்டை, உடன் பசும்பால், மோர், விளாம்பழம், கொய்யாப் பழம், முருங்கைஇலை, வல்லாரை, தவசி முருங்கை, அகத்திப்பூ, தேசிக்காய், ஒடியல், இராசவள்ளி, இளநீர், இளநீரின் வழுக்கல், நுங்கு போன்ற பல அற்புதமான உணவு வகைகளில் நாம் அக்கறை காட்டாமல்இருந்து வருகிறோம். இவற்றை ஒழுங்காக பாவித்து வருவோமாக இருந்தால் சத்துமாப் பேணிகளோ விற்றமின் குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை இருக்காது.

**நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி?**

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அத்திபாரம் அவன் கருப்பையில் இருக்கும் போது இடப்படுகிறது. தாயின் மனமகிழ்ச்சி,போதுமான உடற்பயிற்சி, ஆரோக்கிய உணவுகள் சிசுவின் ஆரம்ப ஆரோக்கிய வளர்ச்சிக்கு அடிநாதமாய் திகழ்கின்றன.

உலகம் இயந்திரமயமாகி சுதந்திரங்கள் பறிபோய்ப் பூமிக் காற்றுப்புகையாகி, புழுதி மண்டலமாகி,ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து, பூமியைக் கதிர் வீச்சுக்கள் தாக்க, இலட்சக்கணக்கான பச்சை மரங்கள் வெட்டிச்சாய்க்கப்பட்டு, பாவப்பட்ட மண் பாலைவனமாகிக் கொண்டிருக்கிறது.

இயற்கையான இனிய கனிகளுக்குக்கூட இரசாயனம் தெளிக்கப்பட்டுப் பகட்டான நச்சுக் கனிகள் ஆக்கப்பட பொலித்தீன்கள் எம்மை ஆக்கிரமிக்க மனிதன் நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச்சவால்களை எதிர்கொள்ள சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு பரந்துபட்ட அளவில் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு ஆரோக்கியமானவன், சுகதேகி என்று எண்ணிக் கொள்வது அவனைப் பல நோய் நிலைகளிலிருந்து காக்கும்.

சிறுசிறு உடல் நலக் குறைவுகளும் நோய்நிலைகளும் அவ்வப்பொழுது ஏற்படுவது இயற்கை. அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்து தொடர்ந்து நாம் ஆரோக்கியமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை அனுகூலமாக அமையும்.

கடுமையான நோய்நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும்.

இயந்திரமயமாகிவிட்ட இந்த உலகை நாம் புத்தி சாதுரியமாக சாதகமாக பயன்படுத்த கற்றுக் கொள்வோம். விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் சராசரியாக வாழும் வயதெல்லை அதிகரித்திருக்கிறது. கற்கை, கற்பித்தல் செயற்பாடுகளில் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினால் உலகம் ஒரு குடும்பம் போல நெருங்கி வந்திருக்கின்றது. இந்த நல்ல மாற்றங்களை எமது சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்வோம்.

உலகிலே உடற்பருமன் அதிகரிப்பால் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் இறக்கின்றனர் எனும் அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது. உடல் நிறை பராமரிப்பு உயிர்காக்கும் என்ற தகவல் ஒவ்வொருவரையும் சென்றடைய வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2024

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2023 டிசம்பர் 12 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள்.(Stationary, Calculator, Toner, Cartridge,
Printer Ribbon, Printer paper, etc...)
1.2 வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதார சேவை வழங்கல்:- தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், கழிப்பறை சுத்தம் செய்யும் பொருட்கள், பாத்திரம் சுத்தம் செய்யும் பொருட்கள், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், றப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்.**

3.1 அலுவலக தளபாடம் - மரம், உருக்கு-கணினி மேசை, கதிரைகள்.
3.2 அலுவலக உபகரணங்கள் (பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன)
3.3 தீயணைப்புசாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4. கட்டிட பொருட்கள்/பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**

4.1 சகல வகையான கட்டிட நிர்மாண பொருட்கள்.
a. சகல வகை தீந்தைகளும், தூரிகைகளும், கலப்பான் வகைகளும் அது தொடர்பான ஏனைய பொருட்களும்.
b. சீமெந்து வகைகள், மாபிள் ஒட்டும் சீமெந்து வகைகள், நீர் கசிவு சீமெந்து வகைகள்.
c. கட்டிட நிர்மாண வேலைகளுக்கான மணல், சல்லிகள், கற்கள் மற்றும் கிரவல் வகைகள்.
d. இரும்பு கம்பிகள், கல்வனைஸ் பைப்புகள் மற்றும் ஆணிகள்.
e. இரும்பு மற்றும் பித்தளையிலான கட்டிட பொருத்துக்களும் பிணைப்புக்களும் பூட்டு வகைகளும். (பிணைச்சல், திறாங்கு, Screw ஆணிகள் போன்றவை)
f. UPVC/CPVC யிலான பைப்பு வகைகளும் அவற்றிற்கான பொருத்துக்களும்.
g. தீராந்தி வகைகள், சலாகை வகைகள் மற்றும் பலகை வகைகளும்.
h. அனைத்து அலுமினிய சட்டங்கள், மற்றும் பொருத்துகள், கண்ணாடிகள், ஒட்டுப்பலகைகள்.
i. குளியலறை மற்றும் கழிப்பறைகளுக்கான மாபிள் பொருத்துகள், சுவர் மற்றும் தரைகளுக்கான மாபிள்கள்.
j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
l. நீர் கசிவு தடுப்பு மற்றும் துருப்பிடித்தல் தடுப்பு இரசாயன பொருட்கள்.

**5. மின்னியல் பொருட்கள்**

5.1 மின்சாதன பொருட்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருட்கள்/சாதனங்கள்.**

6.1 ஆய்வுகூட சாதனங்கள்
6.2 ஆய்வுகூட இரசாயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகன பராமரிப்பு**

7.1 டயர், ரியூப்புகள், பற்றறிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8. பொதுச்சேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுர் வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.
8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயன கருவிகள், இயற்கை உரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள், கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச் சலவை செய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
8.14 உணவு வழங்கல் சேவை.
8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
8.17 பயண முகவர் சேவை.
8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)

**9. எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட.
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டிடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
9.6 மின்சார இணைப்பு வேலைகள்.
9.7 நீர் விநியோக தொகுதி, வடிகாலமைப்பு தொகுதி, கழிவுநீர் சீராக்கி தொகுதி மற்றும் குடிநீர் சீராக்கி தொகுதி வேலைகளும், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளும்.
9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டிடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.9 கட்டிடங்கள்/கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் / தச்சுவேலை.
9.12 எந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.13 கறையான்/பீடைகள் ஒழிப்புவேலைகள்.
9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)
9.15 பராமரிப்பு வேலைக்கான கணியஅளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்.
9.16 தீயணைப்பு இயந்திர தொகுதி பராமரித்தலும் திருத்த வேலைகளும்.

**10. மின்னணு பொருட்கள்.**

10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
10.2 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கதொலைபேசிகளும் வழங்கல்.
10.5 கணினிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

**பதிவு தொடர்பான நியந்தனைகள்**

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவு செய்தல் 2024"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

2. ஒவ்வொரு வழங்கல்/சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. **85000039000926 மக்கள் வங்கி** யாழ்ப்பாணப் பல்கலை கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சிட்டின் பிரதியை இணைக்கவும்.

3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவு பத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொதுதன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4. 2024ஆம் ஆண்டிற்கான சகல விலைமனுக்களும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

5. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் /சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் /சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

(16 ஆம் பக்கம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15 ஆம் பக்கம் தொடர்ச்சி....)

6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்கு மட்டும்)

7. சேவைகள்/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்-II) இனைத் தொடர்பு கொள்ளவும்.

**தொ.பே.இல. 0212226519.**
**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2024

01. தனிப்பட்டதகவல்கள்
   - 1.1 முழுப்பெயர் :......................................................................
   - 1.2 தே.அ.அ. இல :......................................................................
     (தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
   - 1.3 விலாசம்:......................................................................
     ......................................................................
   - 1.4 நிரந்தர தொலைபேசி இல:......................கைத்தொலைபேசி இல:......................
     தொலைநகல்:......................................

02. வியாபாரதகவல்கள்
   - 2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:......................................................................
   - 2.2 வியாபார பதிவு இல:......................................................................
     (வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
   - 2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:......................................................................
     (VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்',
     CIDA பதிவு இலக்கம்............ தரம்................ காலாவதி திகதி..............
   - 2.4 விலாசம்:......................................................................
     ......................................................................
   - 2.5 நிரந்தர தொலைபேசி இல:......................கைத்தொலைபேசி இல:......................
     தொலைநகல் :......................................
     (குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
   - 2.6 மின்னஞ்சல் முகவரி:......................................................................
   - 2.7 மாவட்டம்:......................................................................
   - 2.8 பிரதேசசெயலர் பிரிவு:......................................................................

03. மேலதிகவிபரங்கள்
   - 3.1 வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் :......................................................................
   - 3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :......................................................................
   - 3.3 ICTADபதிவு இல :......................................................................
     (எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறுஆயிரம் மட்டும்) க்குஉட்பட்ட வேலைகளுக்கான கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவர்.

04. வழங்கல் சேவைகளுக்கான விபரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருட்கள் வழங்குனராலேயே பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :..............................

பெயர் :.............................. திகதி :..............................

குறிப்பு

ஒவ்வொரு வழங்கல்/சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 85000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.

(சி-7605)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
**க.பொ.த. உயர்தரம் 2022(2023) பரீட்சையில் கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**கோபிகிருஸ்ணானந்தன் சஞ்சய்**
3 A
வர்த்தகப்பிரிவு மாவட்ட நிலை 38

Congratulations



**விஜயரட்ணம் அனோஜன்**
3 A
வர்த்தகப்பிரிவு மாவட்ட நிலை 53

**வர்த்தகப்பிரிவு–**
மு.சி.முஹம்மது சஹ்ரான் 2 AB மாவட்ட நிலை 63, சி.நிரூயன் 2AB மாவட்ட நிலை 76, ச.முகம்மட் ஆஷிக் A2B மாவட்ட நிலை 84, ஜு.நிகேஷ் பெல்சியன் ABC மாவட்ட நிலை 118, ஞா.கனிஸ்ரன் 3B மாவட்ட நிலை 125

**பௌதீக விஞ்ஞானம்–**
ந.கபீசன் A2B மாவட்ட நிலை 147, க.மிதூசன் B2C மாவட்ட நிலை 346,

**உயிரியல் பிரிவு–**
ப.கிரிசரன் 3B மாவட்ட நிலை 178, வி.டிலக்சன் B2C மாவட்ட நிலை 327, வி.மதுசன் B2C மாவட்ட நிலை 358

**தொழில் நுட்ப பிரிவு–**
இ.கிருபாகரன் 2AB மாவட்ட நிலை 3, அ.கனிஸ்டன் 2AB மாவட்ட நிலை 4, சி. தமிழரசன் B2C மாவட்ட நிலை 24.

**மாணவர்கள் மேன்மேலும் கல்வியில் உயர்வு பெற மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இம் மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கு அர்ப்பணித்த அதிபர், பிரதி, உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

(17830)


"பழைய மாணவர்கள் சார்பில்"
பழைய மாணவர் சங்கம் (PPA), யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## மணி விழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

யா/கொழும்புத்துறை
சென் ஜோசப் வித்தியாலயம்

திருமதி. **விஜயராணி சிறிதரன்**
(SLTS-I)
பயிற்றப்பட்ட ஆசிரியர் (சித்திரம்)

Best Wishes



**சேவைக் காலம்**
1. யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் 1990.03.27-2010.02.21
2. யா/கொழும்புத்துறை சென்ஜோசப் வித்தியாலயம் 2010.02.22- 2023.11.11

சித்திரக் கலை தன்னை
சிந்தையில் நிறையும்படி கற்பித்து
புகழ்சேர் ஆசிரியப் பணிதன்னில்
புனிதம் பேண் தொண்டாற்றி
அகவை அறுபதில் கால் பதித்து
சேவையில் மணிவிழாக் காணும்
எம்நேசம் மிகு பெருந்தகையே!
சீர்சிறப்போடு நீடுழி நீர்வாழ
இறையாசீரை நிறைவாய் வேண்டி
இதயத்தால் வாழ்த்துகின்றோம்.

Congratulations

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ சென்ஜோசப் வித்தியாலயம்.**

(17836)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி உற்சவகால வீதித்தடை

(யாழ்ப்பாணம்)
இவ் வருடம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலய சுந்தசஷ்டி உற்சவ காலத்தில் வழமை போல தற்காலிகமாக வீதிகள் தடை செய்யப்படவுள்ளன. 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை மற்றும் 19 ஆம் திகதியும் பி.ப 5 மணி தொடக்கம் பி.ப 6 மணிவரையும் 18 ஆம் திகதி சூரன்போர் அன்று நண்பகல் 12 மணி - பி.ப 7 மணிவரையும் அவ்வாறு வீதி தடைசெய்யப்படும். இதன்போது பொது மக்கள் மாற்றுப்பாதை ஒழுங்குகளைகடைப்பிடிக்குமாறு மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி)

**மணமகன் தேவை**
1992. இந்து.கேட்டை. Development Officer, யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல: 9830.தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்திற்கு மேலான சேவை(2012 ஆம் ஆண்டு முதல்). www.EQMarriageService.com இணையவழிதிருமண சேவை. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2164)

**மணமகள் தேவை**
1993. இந்து.கார்த்திகை. Team Leader,Australia. மணமகன் பதிவு இல: 9844.தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்திற்கு மேலான சேவை(2012 ஆம் ஆண்டு முதல்). www.EQMarriageService.com இணையவழிதிருமண சேவை. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2164)

**மணமகள் தேவை**
1989. இந்து.புனர்பூசம். Doctor, யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல: 9815. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்திற்கு மேலான சேவை(2012 ஆம் ஆண்டு முதல்). www. EQMarriageService.com இணைய வழி திருமண சேவை. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401. (சி-2164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியும் அன்பும் நம்மிடமுள்ள பெரிய கவலைச் சுமையைப் போக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.

~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன்னுயிர் போல் மன்னுயிரை போற்றினால் எங்கும் ஒளிமயமே

இன்று தீபாவளித் திருநாள். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தை நீக்கி தெய்வீகம் எனும் திருவருளை அடைவதை குறித்துரைக்கும் திருநாள்.

நரகாசுரன் எனும் அரக்கன் தேவர்களுக்கு கொடுமை இழைத்த காரணத்தால், துன்பமுற்ற தேவர்கள் இறைபரம்பொருளிடம் முறையிடுகின்றனர்.

தேவர்கள் மீது கருணை கொண்ட இறைவன் நரகாசுரன் எனும் கொடியவனை வதம் செய்து தேவர்களுக்கு அருள்புரிந்தான் என்பது புராணக்கதை.

இக்கதையினூடு இரண்டு உண்மைகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

அதாவது நாம் யாருக்கும் தீங்கு இழைத்தலாகாது. அதிலும் நல்லவர்கள் மற்றும் அப்பாவிகளைத் துன்பப்படுத்துவது மிகவும் கொடுமையானது.

அவ்வாறான செயல்களை யாரும் செய்துவிடக்கூடாது.

அவ்வாறு நல்லவர்களுக்குத் துன்பம் இழைத்தால், அதுகண்டு இறைவன் பொறுத்துக் கொள்ள மாட்டான்.

இங்கு தேவர்கள் என்ற உவமிப்பு நல்லவர்களைக் குறித்துரைக்கிறது.

அதேபோன்று நரகாசுரன் என்பான் தீயவர்களின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகின்றான்.

ஆக, நல்லவர்களைத் தீயவர்கள் வருத்தினால், நிச்சயம் அவர்களைக் கடவுள் தண்டிப்பார்.

இங்கு வருத்துதல் என்பது தண்டனை கொடுத்தல் எனும் குறும்பொருள் கொண்டதல்ல.

மாறாக தமது தேவையின் நிமித்தம் அலுவலகங்களுக்குச் செல்கின்றவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல், அவர்களை அலைக்கழிப்பது.

இன்சொல் பேசாமல் கடும் சொல் கூறுவது. மனம் நோகும்படியாக வஞ்சிப்பது என்பன உள்ளிட்டவையும் துன்பப்படுத்துகின்ற செயலேயாம்.

ஆகவே தீபாவளித் திருநாள் உணர்த்துகின்ற உட்பொருள் எச்சந்தர்ப்பத்திலும் நாம் மற்றவர்களைக் கடிந்து கொள்ளலாகாது.

அனைவரையும் அரவணைத்து எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு செயலாற்ற வேண்டும்.

இல்லையேல் செய்கின்ற செயல்கள் கன்ம வினையாகத் திரண்டெழுந்து அதற்குரிய தண்டனையைத் தந்தருளும் என்பது அதன் பொருளாம்.

இங்கு இன்னுமோர் முக்கியமான உட்பொருளையும் தீபாவளித் திருநாள் உணர்த்தி நிற்கிறது.

ஆம், நல்லவர்களை வருத்துவது என்பது கொடும் செயல். இதுதவிர, இந்த மண்ணில் எவ்வுயிரும் துன்பப்படாமல் பார்த்துக் கொள்வதும் இங்கு முக்கியமானது.

அதாவது ஏழைகள், வறியவர்கள் கஷ்ரப்படும்போது அதுகண்டு வசதிபடைத்தவர்கள் ஏனோதானோ என்று இருந்து விடக்கூடாது.

மாறாக அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து அவர்களும் துன்புறாமல் இன்புற்று வாழ உதவி செய்ய வேண்டும்.

இது வசதி படைத்தவர்களின் கடமை என்ற உண்மைப் பொருளும் இங்கு உணர்த்தப்படுகிறது.

எனவே நான் எனும் அசுரத்தனத்தை அழித்து தன்னுயிர்போல் மன்னுயிர்களைப் பேணுகின்ற உயரிய சிந்தனையை எம்முள் வளர்த்துக் கொண்டால் அதுவே தெய்வீகம்.

அந்தத் தெய்வீகத்துக்கு நாம் அனைவரும் ஆட்பட வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்ற நாளே தீபாவளித் திருநாளாகும்.

ஆகையால் நாமும் மற்றவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்து ஒளிமயமான சூழலை உருவாக்குவோமாக.

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால் நடாத்தப்படும் பொறியியல் விஞ்ஞான சிறப்புமாணி 2023/2024 கற்கை நெறிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 30/11/2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www. ou.ac.lk) அல்லது பிராந்திய அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021-222 3374) தொடர்பு கொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

# இருளை அகற்றி ஒளி பிறக்க தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

உலகெங்கும் உள்ள இந்து மக்களினால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையில் எமது மனத்துள்ளே இருக்கும் தீய எண்ணங்களை நீக்கி ஒளியை உதயமாக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

விஷ்ணு பகவானினால் நரகாசுரன் தோற்கடிக்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் இந்துக்கள் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதோடு, தனக்கு ஞான ஒளி கிட்டியது போல உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒளி கிட்ட வேண்டுமென நரகாசுரன் விஷ்ணு பகவானிடத்தில் வேண்டியதாக கூறப்படுகிறது.

அதனை நினைவுகூறும் வகையில், அனைவரது மனங்களிலும் ஒளி பிறக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடனேயே இந்து பக்தர்கள் விளக்கேற்றி சமய வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

நாடு என்ற வகையில் நாம் கடந்த இரு வருடங்களில் எதிர்கொண்டிருந்த இருளான யுகத்திலிருந்து மீண்டு, ஒளி நிறைந்த பாதையில் இலங்கை தனது பயணத்தை ஆரம்பித்துள்ள இந்தத் தருணத்தில் நாட்டிற்காகவும் சுபீட்சமாக நாடு மேம்பட வேண்டும் எனவும் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் சுபீட்சத்தின் தீபங்களை ஏற்றி, இலங்கையை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கும், பல்லின மக்களுக்கு மத்தியில் சமாதானம், சகவாழ்வு, நித்திய நல்லிணக்கத்துடன் கூடிய ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தவும் இந்த தீபாவளி பண்டிகை வரப்பிரசாதமாக அமைய வேண்டும் என நான் பிரார்த்திப்பதோடு அனைவர் வாழ்விலும், இன்பமும் நலமும் உண்டாக பிரார்த்திக்கிறேன்.

இலங்கை உட்பட உலகம் முழுவதும் உள்ள அனைத்து இந்து பக்தர்களுக்கும் இருளை அகற்றி ஒளி பிறக்க தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக் கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (நி-6)

## அடுத்த ஆண்டு முதல்
### விளையாட்டுத்துறைக்கு பல்கலைக்கழகம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு புதிய விளையாட்டுத் துறைக்கு பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என நம்பப்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட பல நிறுவனங்களின் அனுமதியைப் பெற்று 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அதன் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-6)

## உலக மக்கள்தொகை 800 கோடியைக் கடந்தது

### அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம்

(வோஷிங்டன்)

உலக மக்கள்தொகை தொகை 800 கோடியைக் கடந்து விட்டதாக அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் 26 ஆம் திகதி இந்த எண்ணிக்கையை உலக மக்கள்தொகை கடந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, உலக மக்கள் தொகை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த 2000 ஆம் ஆண்டு 600 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை, தற்போது 800 கோடியாக அதிகரித்துள்ளது. (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **திங்கட்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை** வவுனியா பிரதேசத்தில் அரசன் அரிசி ஆலை பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## 27 மில்லியன் பெறுமதியான கஞ்சா அனலைதீவில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அனலைதீவில் 27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அனலைதீவு கரையோர பகுதியில் கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து குறித்த கஞ்சா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பொதிகளில் 69 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா காணப்பட்டது எனவும், அவற்றின் 27 மில்லியன் ரூபாய் பெறுமதி எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-33)

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2023

**"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ, வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது"**

[illegible]

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தீபாவளி விசேட பூஜை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜையுடன் ஆரம்பமாகும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழவிடு! அழவிடு! உறவுகளை அழவிடு!

# தேராவில் துயிலுமில்ல காணியை

# விடுவிக்குமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்ல காணியினை விடுவிக்க கோரி நேற்றைய தினம் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**





யுத்தம் முடிவடைந்து 14 வருடம் கடந்த நிலையிலும் மாவீரர் துயிலுமில்லத்துக்குரிய காணியை இராணுவத் தினரால் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இதனை விடுவித்து தருமாறு மாவீரர் பெற் றோர்கள் தமது கல்லறைகளில் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என தெரிவித்து உறவுகள் ஆர்ப் பாட்டம் ஒன்றை முன்னெடுத் தனர்.

அழவிடு அழவிடு உறவுகளை அழவிடு, வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு. பெற்ற வயிறு பத்தி எரிகிறது, சர்வதேசமே புதிய பதிலை எமக்குத்தா போன்ற கோசங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேலமாலிதன், பிரதேச சபை உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-316)

# மனிதநேய ஒருமைப்பாட்டை வாழ்வில் கடைப்பிடிக்க பண்டிகைகள் துணை புரிகின்றன

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இந்துக் குருமார் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மனித நேய ஒருமைப் பாட்டை தமது வாழ்க்கையயில் கடைப்பிடித்து வாழ்வதற்கு பண்டிகைகள் துணை புரிகின்றன என தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இந்துக்குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகெங்கும் உள்ள தமிழர்கள் இந்துக்களினால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளி முக்கிய வகிபாகம் வகிக்கின்றது. இப்பண்டிகை தொடர்பாக பல்வேறு புராண சான்றாதாரங்களும் கதைகளும் காணப்படுகின்றது.

மகிழச்சி பொங்க ஊர் உறவுகளுடன் கூடி இணைந்து மகிழ்ச்சியடையும் பண்டிகையாக காணப்படுகின்றது.

அனைவர் மனதிலும் வாழ்விலும் வழமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ இத்தீபத் திருநாளில் ஓர் வழி கிடைத்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்து குருமார்கள் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகின்றோம் என குறிப்பிட்டுள்ளது. (நி)

# மணிவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் வாரிதி திருமதி. குலேந்திரராஜா சாந்தினி தம்பதிகளின் மணிவிழாவும் கே.ரி.சி நிறுவன பரிசளிப்பு விழாவும் எதிர் வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை பி.ப 3 மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கழைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி.கௌரி சண்முகலிங்கன், எம்.பி. எச். ஐ.எல் (இ.டி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

## டெங்கு அபாய வலயங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி வீடுகள் மட்டுமின்றி பொது இடங்களிலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் டெங்கு பரவும் இடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 |
| தக்காளி | 250 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 |
| கோவா | 350 | 300 | 400 |
| கரட் | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 200 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 160 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 450 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 200 |
| பயிற்சிங்காய் | 400 | 600 | 500 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 160 | 240 |
| கறிமிளகாய் | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 600 |
| போஞ்சி | 350 | 500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 380 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 200 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெற்றோல்...

விலை 10% அதிகரிக்கலாம்

எவ்வாறாயினும், மண்ணெண்ணெய்க்கு இந்த வரி அறவிடுவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சீனாவின்...

வுள்ளதால், பிராந்திய ஒத்துழைப்புக்கு பிரச்சினையான கப்பல்கள் நாட்டுக்கு வருவதை நிறுத்துவதற்கு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவின் பிரகாரம், வெளிநாட்டுக் கப்பல்கள் அடுத்த வருடம் இலங்கைப் பெருங்கடல் பகுதியில் ஆராய்ச்சிக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் அவை இரத்து செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் பெப்ரவரியில் மற்றுமொரு ஆய்வுக் கப்பலை அனுப்புவதற்கு சீனா அனுமதி கோரியுள்ள நிலையில் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

முன்னதாக இரண்டு சீனக் கப்பல்கள் வந்ததைப் போலவே இந்தக் கப்பலின் வருகை குறித்தும் இந்தியாவின் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டதாக இராஜதந்திர மட்ட கருத்துக்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## இலங்கை...

குறித்த தீர்மானத்தை எடுப்பதற்காக தொலைக் காணொளி ஊடாக இடம்பெற்ற அவசரக் கூட்டத்தில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா பங்கேற்றுள்ளதாக அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் சர்வதேச கிரிக்கெட் பேரவை, இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை நேற்று முன்தினம் முதல் இடைநிறுத்தியது.

இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் தலையீடு காணப்படுவதனால் அதன் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

உறுப்பினர் என்ற கடப்பாட்டை பாரதூரமான முறையில் இலங்கை கிரிக்கெட் மீறியுள்ளதாகவும், அதன் நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறவில்லை எனவும் சர்வதேச கிரிக்கெட் பேரவை குறிப்பிட்டுள்ளது.

எனவே, மறு அறிவித்தல் வரை இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தநிலையில், இது சர்வதேச கிரிக்கெட் பேரவையின் திடீர் முடிவாக இருந்தாலும் இலங்கை கிரிக்கட்டின் கோரிக்கைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிரிக் இன்போ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

## விகாரைகள்...

துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள 4 ஆம் நாள் அமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்த பகவான் குறிப்பிட்டது போன்று பிக்குமாரின் பராமரிப்பு என்பது புண்ணியமான பணி ஆகும். பூஜித்த திஸ்ஸ தேரர் நோய்வாய்ப்பட்ட தேரர்களை பராமரிக்க தன்னை முழுவதும் அர்ப்பணித்திருந்தார். அவர்களின் நோய்களை சுகப்படுத்தி இருக்கிறார். இவ்வாறு செய்வது ஒரு புண்ணியமாகும் என புத்த பகவான் கூறியுள்ளார்.

பௌத்த விகாரைகள் தொடர்பாக பிரச்சினைகள் எழும் போது அவற்றை தீர்த்து வைக்க பிறிதொரு நீதிமன்றத்தை ஆரம்பிக்க முடியும் என்ற சட்டம் அரசியலமைப்பில் உள்ளது. ஆனால் கடந்த 40 வருடங்களில் இந்த சட்டவாக்கத்தை நாங்கள் வழங்கவில்லை. அதன் பிரதிபலனாக இன்று விகாரைகளில் பிரச்சினை ஏற்படும்போது சாதாரண நீதிமன்றத்தை நாங்கள் நாட வேண்டி உள்ளது.

இதனால் நடைமுறை ரீதியாக சிக்கல்கள் உருவாகலாம். தேரர்கள் சாதாரண நீதிமன்றுக்கு சென்று சாட்சியங்கள் வழங்குவதால் நீண்ட காலம் எடுக்கப்படும். எனவே இது மத நல்லிணக்கத்துக்கு சிறந்த விடயமாக அமையாது. இலங்கை தேரர்கள்...

கௌரவத்துக்கு குந்தகமாக அமைகிறது. எனவே அரசியல் அமைப்பினர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி இருக்கிறார்கள் என்றார் (ம-7)

## இலங்கை அணி...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## 14 மாவீரர்...

வத்திற்கெதிரான கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

முகாம்களாக உள்ள வணக்கத்திற்கு உரிய இடங்களை விடுவித்து முழுமையாக மக்கள் சென்று தங்கள் வணக்கத்தினை செலுத்தி ஆறுதல் பெறுவதற்கு சர்வதேச சமூகம் தான் தலையிடவேண்டும் எனவும் அவர் கோரிக்கையினை முன்வைத்துள்ளார். (ம-7)

## விஷம் வைத்து...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி செயலகத்தில் விஷம் இருக்கக்கூடும் என்பதால், தான் ஒரு போதும் அங்கு செல்லமாட்டேன். நான் ஜனாதிபதியை சந்திப்பேன், ஆனால் ஜனாதிபதி செயலகத்திற்கு செல்ல மாட்டேன், நான் அங்கு ஒரு கிளாஸ் தண்ணீர் குடிக்க மாட்டேன், அது விஷமாக இருக்கலாம் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க,

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கிரிக்கெட் தடை செய்யப்பட்டதாக தெளிவாக புலனாகிறது.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இலங்கை கிரிக்கெட் தடை செய்யப்பட்டமைக்கு மது போதை ஊடாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதாக தகவல்.

நாட்டிற்கு துரோகம் செய்யும் ஒரு குழு உள்ளது

“இலங்கையில் உள்ள அனைத்து கிரிக்கெட் சங்கங்களும் எனது அதிகாரத்தால் கலைக்கப்படும். சில சங்கங்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும்.”

ஜனாதிபதியையும் சமூகத்தையும் தவறாக வழிநடத்தும் உயர் அதிகாரிகள் உள்ளனர்.

நாட்டிற்கு என்ன நடந்தாலும், சில வஞ்சக மற்றும் ஊழல் சமூக ஊடகங்கள் உள்ளன, எத்தனை கைகொடுத்தால், அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பார்கள், அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

பாதாள உலகம் என் உயிரைப் பறிக்க நிறைய பணம் செலவழிக்கும், எனது பாதுகாப்பை அதிகரிக்கச் சொன்னேன், ஆனால் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை.

கிரிக்கெட் அமைப்புக்கு வரம்பற்ற அதிகாரம் எப்படி கிடைத்தது என்று எனக்கு ஒரு கேள்வி உள்ளது. நாங்கள் ஐசிசியிடம் பேசினோம் ஆனால் அவர்கள் பதிலளிக்கவில்லை என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3537 — சீட்டிழுப்பு திகதி 11.11.2023
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 37 44 58 78
K — 19112

தன நிதானய — திகதி -2023.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 1325
Y 39 42 70 71 Y
Double Chance 30433

Lucky 7 — திகதி 11.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0121
L7 இலக்கம் 1 0
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 4 3 9 9 1 8

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0604
மிதுனம் 17 19 27 50 மிதுனம்
17339 — 20

மெகா பவர் — திகதி 11/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1643
Z 24 16 23 30 74
37710

மஹஜன சம்பத — திகதி 2023/11/11 — சீட்டிழுப்பு இலக்கம் 5295
X 2 6 5 3 9 6

உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி 11.11.2023 — வெற்றி வாரம் 003 — வர்ணம் நீலம்
B 1 7 4 3 2 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,864,345.60
DLB — தொலை பேசி: 011-2 333 546-47 — Web: www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2269 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.11.11 — தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 21 31 41 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,696,068/-

சனிதா — திகதி 2023.11.11 — வெற்றி வாரம் 4430 — வர்ணம் இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 34 58 61 68 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,541,600.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3981 — வர்ணம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.11.11 — தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 25 37 52 — சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,937,848/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 15 09 44 59 62
சீட்டிழுப்பு வாரம் 1445 — சிவப்பு — திகதி 2023.11.11 — சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 463,813,904.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம்: 2095 — வர்ணம்: மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி: 2023.11.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,417,408/-
வெற்றி இலக்கங்கள் 01 21 28 33 B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் நிகழ்வில் மது அருந்தியவர் மரணம்

(கொழும்பு)

கோட்டை - எத்துல் கோட்டை பிரதேசத்தில் நான்கு மாடிக் கட்டிடத்தில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வொன்றில் மது அருந்திக்கொண்டிருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ரன்ன வடிகல பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடைய நபர் ஆவார்.

இதே வேளை, பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்ட இரண்டு பெண்கள் உட்பட மூவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொண்ட ஏனையவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் அதிகவிலை கொண்ட ஏழு மதுபான போத்தல்களை அருந்தியிருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (ம-7)

# மண்மேடு வீழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு

பதுளை - ஹாலிஎல .ரொக்கதென்ன தோட்ட பகுதியில் அமைந்துள்ள வீடுகள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் பதுளை ஆதார வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கபட்ட நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மேலும் இருவரின் நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா

SriLankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

(C-7615)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7615)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## கனடாவில் உயர்கல்வி

12 வருட வெற்றிப்பயணமாக...

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம். (17805)
0212 050 988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## மணமகள் தேவை

யாழ் கௌரவ 48 வயதான திருமணமாகாத கணனி பயிற்றுவிப்பாளருக்கு மணமகள் தேவை. சாதகம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. சீதனம், திருமணச் செலவுகள் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு (17664)
075 113 2599

## VILLAGE HOTEL பஸ் சேவை

JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P:077 544 8503

## விமலம் திருமண சேவை

. கனடா, இலங்கை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17455)

கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
077 240 9276

## இரண்டாம் மொழி சிங்களம் தரம் 6 2024

புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்
15.11.2023 புதன்கிழமை
இடம் : நீராவியடி (17663)
077 214 0220
077 990 6867
40, மனிக்கூட்டு வீதி, நீராவியடி

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (17459)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

❖ தாவடியில் விஜிதா மில் அருகில், 4 பரப்பு காணி விற்பனைக்கு பிரித்து தரப்படும்(நல்ல அயல் சூழல்)
❖ A9 வீதி முகப்புடன், கைதடி சந்திக்கு அருகில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு.

உரிமையாளர் : (17828)
076 662 2216
077 082 1010

## மாணவர் அனுமதி

### (தரம் - 01 தொடக்கம் தரம் 11)

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையான அனைத்து பாடங்களும் பாடசாலை பிரபல ஆசிரியர் குழாமினால் நடைபெறுகின்றது.

புதிய மாணவர்களுக்கான அனுமதிகளும் வழாங்கப்படுகின்றது. உடன் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**இடம் : எழுதுமட்டுவாழ் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன் வீதியில் அந்தோனியார் ஆலய அருகாமை.**

தொடர்பு எண் :076 947 1479

தகவல் :
(C-7613) **கல்வி நிலைய நிர்வாகி**

## AARUDHRA Matrimony ஆருத்ரா திருமணசேவை

இன்றே பதிவு செய்யுங்கள்!
"தீபாவளி பரிசு காத்திருக்கிறது"
24 கரட் தங்க நாணயத்தை வென்றிடுங்கள்"
1g FINE GOLD 999.9

✓ வரையறையற்ற வரன்கள்
✓ தரகர் கூலி இல்லை
✓ பதிவுகள் ரூ. 3000 இலிருந்து

(17847)

பதிவு செய்யும் முதல் 100 மணமக்களில் ஒருவராகி 1g 24 கரட் தங்க நாணயத்தை பரிசாக வென்றிடும் வாய்ப்பை தட்டிச்செல்லுங்கள்!
மேலதிக விபரங்களுக்கு: www.aarudhra.lk/suyamvaram
+94 77 913 8835 | www.aarudhra.lk

## Happy Supermarket - உரும்பிராய்

HAPPY இன் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 275/= | (max 1 Kg) | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295/= | (max 2 Kg) | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 440/= | (max 3 Kg) | |
| 1 Kg றவை | - 288/= | | |
| 1 Kg அரிசி மா | - 189/= | | |
| 1.5 L Pepsi | - 289/= | ~~(350/=)~~ | (Max 2) |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= | ~~(330/=)~~ | |
| 400g சஸ்ரயன் (Sustagen) | - 3400/= | ~~(3900/=)~~ | |
| 500g சொக்லேட் கிறீம் பிஸ்கட் | - 480/= | ~~(560/=)~~ | |
| 400g அங்கர் பால்மா | - 1025/= | ~~(1080/=)~~ | |
| 310g Sponge vanilla cake | - 450/= | ~~(550/=)~~ | |
| 1 Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 360/= | ~~(430/=)~~ | |
| Maggi நூடில்ஸ் | - 135/= | ~~(140/=)~~ | |
| சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ | |

1025/= Anchor ~~1080/-~~ (17848)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket 0777 8080 30

## காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை

(17835)

076 057 0354,
077 623 4204, 076 755 8606


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.19?, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org